தென்மொழி

26871

மொழி, கருத்து, வினை!

தனித்தமிழைப் போற்றாதார் நூலெழுதல்
தமிழ்மொழிக்குக் கேடு செய்யும்!
தனித்தமிழைப் பேணாதார் உரையாற்றல்
தமிழினத்தை அடிமை கொள்ளும்!
தனித்தமிழைப் பழித்திடுவார் அரசாளல்
தமிழ்நிலத்தில் கீழ்மை சேர்க்கும்!
தனித்தமிழே இனித்தமிழாம்! தமிழினத்திற்
குரிமைதரும் எழுச்சி ஊற்றும்!

தாழ்ச்சியுறுந் தமிழினத்தின் மேன்மையெலாம்
தமிழ்மொழியின் மேன்மை ஒன்றே!
சூழ்ச்சிமிகும் தமிழ்க்கலப்பை நீக்கிடுக,
சொல்லாலும் எழுத்தாலும் வழக்கினாலும்!
வீழ்ச்சியுற்ற வரலாற்றின் அடிநிலையில்
தமிழ்வீழ்ந்த நிலையைக் காண்க!
காழ்ச்செயிர்த்த வல்லுணர்வால் முனைத்தெழுந்து
கலப்புமொழித் தீமை கொல்க!

மொழிநலமே இனநலமாம்! முழுமாந்தப்
பெருநலத்தின் பகுதிக் கூறும்!
மொழிநலத்தைச் சிதைத்திடுவோர் இனஞ்சிதைப்-
இனநலத்தின் முளையைச் சீய்ப்போர்! [போர்;
மொழிநலத்தைக் காவாமல் இனமிழந்த
முழுநலன்கள் கோடி கோடி!
மொழிநலமே கருத்துநலம்; கருத்திலையேல்
வினையில்லை; விளைவும் இல்லை!

சுவடி: 14.
ஓலை: 4
விலை: உரு 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

நமக்கு வந்த மடல்கள்.

0;533 : பெருந்தகையீர், தங்களுக்கு வணக்கம் பல, தங்களுக்கு நான் எழுதும் முதற்கடிதம் இதுவே. தங்களின் மேல் பற்றுக் கொள்ளும் யான் 16 அகவை உடைய மிகச்சிறியவனே! இருந்தாலும் தாங்கள் கூறும் அறிவுரைகளும், தாங்கள் எடுத்துவைக்கின்ற கருத்துகளையும் கண்டுதான், யான் தங்களின் மாணுக்கனுக விளங்குகிறேன். ஐயா! மந்த அறிவு கொண்டு நாகரீக நாற்றமடிக்கும் இம் மடத்தமிழர்களின் பெருமைக்குத் தாங்கள் உழைத்து வருகின்றீர்கள். ஆனுல் மற்றவர்கள் மட்டும் தங்களுக்கு என்ன வந்துவிட்டது என்று இருக்கும் போது, தாங்கள் உங்களின் உழைப்பை எங்களுக்குப் பொதுவாக என்னைப் போன்ற வருங்கால இளைஞர்களுக்காகவும் நம் தமிழுக்காகவும். நம் மரபுக்காகவும் பயன்படுத்தி வந்துள்ளீர்கள்-வந்துகொண்டிருக்கின்றீர்கள்!—சுவடி 4 ஓலை 3 படித்தேன்—ஆசிரியவுரையைப் படித்தேன். தாங்கள் கூறியபடி நடப்பார்கள் என நம்புகிறேன், ஏனென்ருல் தி, மு. க. பொதுக்கூட்டங்களில் தங்களின் பாடல்களைப் படித்து அதற்குக் கருத்தையும் கூறும் அவர்கள் தங்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பார்கள் என்று நம்புவோம். ஐயா தாங்கள் என்றும் தமிழன்னையின் அருந்தவப் புதல்வரே! என்ன இவன் நம்மைக் காக்கை பிடிக்கிருன் என்று பார்க்காதீர்கள். ஏன் இப்படி நான் சொல்லுகிறேன் என்ருல், ''இன்றைய தமிழன் மிகவும் இழிநிலையில் உள்ளான்'' இந்நிலையிலும் தாங்கள் தமிழன்னையின் கழுத்தில் புகழ்மாலை சூட்டிக்கொண்டிருப்பதால்தான்! ஐயா! தென்மொழியின் வளர்ச்சிக்காக உருபா 10- இச்சிறு தொகையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவும்.

ந, இளங்கோ, மதுரை-10

0.534 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்கு, வணக்கம் பல. யான் தென்மொழிக்கு உறுப்பினராக உள்ளேன். ஒரு திங்களுக்கு முன் நானும் என் நண்பனும் தென்மொழித் தொகுப்புகள் இரண்டினைத் தருவித்து இங்குள்ள தமிழ் ஆர்வம் கொண்ட நண்பர்களுக்கும் அளித்து, நமது சீரிய கருத்துகளை அறியச் செய்தோம். தங்களின் தென்மொழித் தொகுப்புகளை படித்த பிறகுதான், தமிழரது உண்மை வரலாறு, உலக நாகரிகம் தோன்றிய இலெமுரியாக் கண்டத்தின் வரலாறு ஆகியவை அறியப் பெற்ருேம். உண்மையில் தமிழ்த் தொண்டாற்றுவோர் யார், பொருளுக்கும், பதவிக்கும் அடிமையாகித் தமிழுக்கு இரண்டகம் (துரோகம்) செய்பவர்கள் யார் யாரென அறிந்தோம். ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்களை இதன் வாயிலாக உணர்ந்தோம். நானும், என் நண்பர்களும் தமிழர் இனம், மொழி இரண்டிற்கும் உண்மைத் தொண்டாற்றும் தலைவர்களைத் தேடினுேம். கிடைத்து விட்டது விடை. ஐயா தாங்களும் பாவாணர் அவர்களும் நீடூழி வாழ்ந்து, தன்நிகரற்ற தமிழுக்குத் தொண்டினை நல்க வாழ்த்துகிருேம்.

'தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்
தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப்போகும்''

—இரா, செல்வராசன், சின்னசேலம்

0:535; அன்பு ஐயாவிற்கு! அன்பு வணக்கம் பல, உங்களைப் போன்ற நேர்மை பிறழா ஓர் அறிஞரைப் பெற்றதற்கு இந்தத் தமிழகம் பன்னூருண்டுகள் தவம் கிடக்கக் கடமைப்படவேண்டும். இத்திங்கள் ஆசிரிய உரை உங்கள் நடுநிலை நெஞ்சினைத் தெள்ளிதின்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் கீழ்நிலைக்குக்
காரணியமாவார் எவர்?

நாட்டுக்கு நன்னிலை வாய்த்திட வில்லையா ?
நாளுக்கு நாள், அது தாழ்வதும் உண்மையா ?
கேட்டுக்குக் காரணியம் எவர் ?–என்று கேளுங்கள் !
கீழ்நிலை வாழ்கின்ற மக்களா ? இல்லையே !
கூட்டுக்குள் உயிரொடு கூழுக்கிங் கலைந்திடுங்
கூன்செறி மக்களோ, நல்லவர் ! நல்லவர் !
பூட்டுக்குக் காவலாய்ப் பூனைக்குத் தோழனாய்ப்
பொய்யுரைத் திளிக்கின்ற அரசியல் புரட்டரே !

தப்பாமல் திட்டங்கள் சட்டங்கள் செய்யினும்
தாழ்ச்சியும் வீழ்ச்சியும் தவிர்ந்திட வில்லையா ?
எப்போதும் இந்நிலைக்(கு) ஏது, எவர் தெரியுமா ?
ஏழ்மையில் மிதக்கின்ற மக்களா ? இல்லையே !
முப்போதும் உழைத்தாலும் முழத்துணிக் கலைகின்ற
மூங்கைவாய் மக்களோ, நல்லவர் ! நல்லவர் !
ஒப்போலை பெற்றபின் ஊர்தியில் உலாவந்(து)
ஊரை உறிஞ்சிடும் அரசியல் உலுத்தரே !

கோடிபல் கோடியாய் வரிகளைத் தண்டியும்
கொடுமையும் கடுமையும் மறைந்திட வில்லையா ?
மூடி மறைக்காமல் கேளுங்கள், காரணியம் !
முன்னேறத் தெரியாத மக்களா ? இல்லையே !
வாடிவதங்கிடும் கள்ளமில்-கவடுமில்-
வாய்மைசேர் மக்களோ, நல்லவர் ! நல்லவர் !
கூடியே நல்லுரை கூறி, அம் மக்களைக்
கொள்ளை யடித்திடும் அரசியல் கொடியரே !

பாலமும் அணைகளும் பன்னூறு கட்டியும்
பாழ்மையும் ஏழ்மையும் அழிந்திட வில்லையா ?
ஓலமும் அழுகையும் ஏன் ?—என உணருங்கள் !
உழைக்கின்ற கூட்டமா, காரணியம் ? இல்லையே !
காலமும் ஏழ்மையில் கண்ணீர் வடித்திடும்
கல்லாத மக்களோ, நல்லவர் ! நல்லவர் !
மூலமும் முடிவுமாய் வெற்றுரை பேசியே
முகமன் விரும்பிடும் அரசியல் எத்தரே !

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி : 14   ஓலை : 4

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி
இலக்கிய இதழ்

கடகம் தி. பி. ௨00௮-ஆகத்து-1977

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

முதலமைச்சர்க்குத் தென்மொழியின் முதல் வேண்டுகோள்!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைச்சரவை அமைத்து ஏறத்தாழ இரண்டு மாதங்களாகின்றன. பலவகையான பொறுப்புகளில் அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பெற்றுள்ளது. சிலர்சிலநோக்கங்களைப் பெரிய அளவில் கருதிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களின் போக்குகள் நாளடைவில்தான் தெரியவரும். பொதுவாகவே நம் தமிழகத் தலைவர்கள் பேசுவது பானையளவென்றால் செய்வது கரண்டியளவாகக் கூட இருப்பதில்லை. ஓரிரு தலைவர்கள் அந்த அளவைவிடக் கொஞ்சம் கூடுதலாகச் செய்து காட்டலாம். ஆனால் அவற்றாலெல்லாம் நம் நாட்டுக்கு ஒரு விடிவு ஏற்பட்டுவிடாது. எனவே, அ. தி. மு. க. அமைச்சரவை அரசியல் நிலையிலும், பொருளியல் நிலையிலும், குமுகாய நிலையிலும், குறிப்பாக, இங்குக் காலங்காலமாய் அழுத்திவைக்கப்பெற்ற இன இழிவு நிலைகளிலும், வேண்டுமென்றே பின்னுக்குத் தள்ளிவைக்கப் பெற்ற தமிழ்மொழி முன்னேற்றத்திலும், கல்வியமைப்புகளிலும், சாதி, மதச் சழக்குகளிலும்

மிகுந்த ஈடுபாடும் நடுநிலையும் அக்கறையும் கொண்டு, செய்ய வேண்டிய ஆக்கங்களும், தவிர்க்கவேண்டிய மறைமுகக் கேடுகளும் நிறைய உள்ளன. வெறும் ஊழல், கையூட்டுகள் என்று பேசி விடுவதாலும், இங்கொன்றும் அங்கொன்றுமாய் எடுத்துக்காட்டி விடுவதாலுமே அவை ஒழிந்துவிடப்போவதில்லை. மேலும் இவற்றையெல்லாம் செய்ய முனைகையில், நடுவணரசின் சூழ்ச்சிகள் சிலவற்றில் சிக்கிவிடாமலும்; அதன் ஆசை காட்டலுக்கு அங்காந்து விடாமலும். நமக்குற்ற ஒரே குறிக்கோளே அரசியல் வாழ்வாகக் கொண்டு இயங்குமாறு நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம், கடந்த காலங்களில் எவ்வளவு முயன்றும் நாம் சறுக்கி விழுந்த-விழவைக்கப் பட்ட-நிலைகளையும், அவற்றுக்குத் தரப் பெற்ற விலைகளையும் நாம் மறந்துவிடுதல் கூடாது. இவற்றைப் பற்றியெல்லாம் வெட்டவெளிச்சமாக அவ்வப்பொழுதைக்கு அரசுக்குச் சுட்டிக்காட்டும் பொறுப்பு தென்மொழிக்குண்டு. அதன் அடிப்படையில் தமிழக அரசின் முதலமைச்சர்க்கு நாம் விடுகின்ற முதல் வேண்டுகோளாக இதனை அவர்களின் பார்வைக்கு வைக்கின்றோம். இதன் இன்றியமையாமையையும் ஏற்றமும் கருதி விரைவில் ஆவன செய்வார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்,

கடந்தவாண்டு நெருக்கடி நிலையை, இவ்விருபதாம் நூற்றாண்டின் ஈடிணையில்லாக் கொடுமை நிறைந்த வல்லதிகாரி திருவாட்டி இந்திராகாந்தி அறிவித்தவுடன், அதையே சாக்காகக்கொண்டு. ஆங்காங்குள்ள அரசியல் தலைவர்களும், அதிகார மூப்பர்களும், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற வகையிலும், இட்டதே சட்டம், வைத்ததே வரிசை என்ற முறையிலும் நடந்து கொண்ட கொடுமையான கோலாட்டங்களையும் கடுமையான வாலாட்டங்களையும் சொல்லி முடியாது. அதுவும் தமிழ்நாடு போலும் குடியரசுத் தலைவர் பெயரால் ஆட்சி நடந்த மாநிலங்களிலோ, ஆளுநர்களும், அவர் அடியாட்கள் அனைவரும் சேர்ந்து நடத்திய கொட்டங்களை இன்று எந்தவகைச் சட்டங்களாலும் உசாவல்களாலும் ஆழங்கண்டுவிட முடியாது. அத்தகை கொடுமையான இருண்ட காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு இங்குள்ள தமிழ்ப்பகைவர்கள் சிலர் இரண்டு முகாமையான செயல்களைச் செய்துள்ளனர்.

அவற்றுள் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 683-ஆம் எண் வரிசையில் வெளியிட்ட தமிழ்நில வரலாறு என்னும் ஓர் அரிய வரலாற்று நூல், வெளிவந்த சில நாட்களுக்குள்ளேயே, தடைசெய்யப்பட்டது ஒன்றாகும். இந்நூல் வெளியிடப்பெற்றது கலைஞர் ஆட்சிக் காலத்தில். தடை செய்யப்பெற்றது இம்மாநிலத்தின் ஆளுநராகவிருந்த சுகாதியாவின் ஆட்சிக்காலத்தில். 604 பக்கங்களும் 12·75 உருபா விலையும் கொண்ட இம் மெய்யான வரலாற்று நூல் பட்டப்படிப்பிற்குரியதாகத் திருத்தப்பெற்ற பாடத்திட்டத்தின்படி வெளியிடப்பெற்றதாகும். இதனை எழுதிய பேராசிரியர், புலவர், உயர்திரு. கோ. தங்கவேலு க.மு. அவர்கள் தம் ஆற்றலையும் செம்மாந்த தமிழறிவையும் முழுமையும் புலப்படுத்தி எழுதியதாகும் இந்நூல். மேலும் தமிழ் நாட்டுப்பாடநூல் நிறுவனம் இதுவரை வெளியிட்ட வேறு எந்த நூலுக்கும் இல்லாத தனிச் சிறப்பியல்கள் பல இந்நூலுக்கு உண்டு.

இந்நூல், தூய தனிச்செந்தமிழில் எழுதப்பெற்றதாகும். மாணவர்களுக்கான தமிழில் எழுதப்பெறும் ஒரு நூல் எத்தகை தூய, பிழையில்லாத மொழி நடையில் எழுதப்பெற வேண்டும் என்பதற்கு இத்தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் இதுவரை வெளியிட்டுள்ள 683 நூற்களில் இதுவே தலையாய, தகுதியுள்ள ஓர் எடுத்துக்காட்டாகும். இந்நூலில் பயன் படுத்தப் பெற்ற சொற்கள் அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களாகும், சங்ககாலம் என்பதுகூட கழகக்காலம் என்றே இதில் எழுதப் பெற்றிருக்கிறது. மேலும் இதில் பயன்படுத்தப் பெற்றுள்ள சொற்களைப் பார்த்தாலே இந்நூல் எத்தகைய தூய தனித்தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளது என்பதைக் கண்டு கொள்ளலாம். அகவை, அணியம், அறிவன் (புதன்), அளியன், இயங்கி, ஈகம், ஈரோடை (ஈரோடு), உண்ணோட்டகர், ஏந்து, ஒப்போலை, கமுக்கம், காரி (சனி), குளம்பி, குமுகாயம், குழுமம், கைந்நூலாடை (கதராடை), கொண்முடிபு, சொலவகம் (சுலோகம்), ஞெகிழி (Plastic), தகரி, (பீரங்கி), தாளிகை, தன்னுட்சி இயக்கக் கழகம் (Home Rule League), தூவல், தொல்கதை (புராணம்), தொய்வம் (Rubber], தோற்ரவு [அவதாரம்], நயன்மை [நீதி], நயன்மைக் கட்சி (நீதிக்கட்சி, Justice party] நண்ணிலக்கடல் [மத்தியதரைக்கடல்], நீலமலை, நீலாறு, [Nile River]. நீர்மம், பண்டாரகர், படிநிகராளி, பனிமலை [இமயமலை] பாதக்கூடு [Boots], பாழி [ஆசிரமம்), பாடுகிடப்பு, [சத்தியாகிரகம்], பிறங்கடை [வாரிசு], பைஞ்சுதை, பேராயம் [congress], மாழை (உலோகம்), மூலக்கனி [தாது], வயவர் (Sir), விளக்கணி [தீபாவளி], விரைமா [Talcum powder] விளத்தம், வெள்ளுவா [பௌர்ணமி], வேட்டெஃகம், வைப்பகம் [Bank] முதலிய பன்னூற்றுக் கணக்கான பழஞ் சொற்களும் புத்தாக்கச் சொற்களும் நூலை அருமையான நடையுடையதாகச் செய்திருக்கின்றது. இத்தகைய சொற்பயன்படுத்தம் தமிழ்ப்பகைவர்களின் கண்களை முதற்கண் குத்தியிருக்க வேண்டும்.

அடுத்து இதில் தமிழ்நாட்டின் மெய்வரலாறுகள், செய்திகள், நிலக்கூறுகள், இனக்கூறுகள், மொழியியற் கூறுகள், குமுகாயப் போராட்டங்கள் முதலிய அனைத்தும், குமரிக்கண்டத்தினின்று இற்றைத் திரவிட இயக்க ஆட்சிவரை மிக மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் ஒன்றுவிடாமலும் மிகக்கவனமாகக் குறிக்கப் பெற்றிருக்கின்றன. இந்நூலைப் படிக்கும் பொழுதுதான் தமிழினத்தின் பண்டை வரலாற்றுச் சிறப்பை எவரும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு தமிழ் மொழித்தூய்மையையும், தமிழ் இனப்பெருமையையும் தமிழ்நாட்டு மெய்வரலாற்றையும் இந்நூல் கொண்டிருப்பதால்தான், இங்குள்ள தமிழ்ப் பகைவர்கள் சிலர், இந்நூலைப்பற்றி ஆட்சியாளரிடம் தாறுமாறாக, எடுத்துச்சொல்லி இதனைத் தடை செய்வித்திருப்பதுடன், அச்சிட்ட ஆயிரக்கணக்கான நூல்கள் அனைத்தையும் வெளியில் விடாமல் ஓர் அறையில் வைத்துப்பூட்டி, அரக்கு முத்திரை வைக்கச் செய்திருக்கிறார்கள்.

இந்நூல் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மிக இன்றியமையாத ஒரு வரலாற்று நூலாகும். இதிலுள்ள செய்திகள் அனைத்தும் இங்குள்ள ஒவ்வொரு தமிழனும் அறிய வேண்டுவன. இதனை அப்படியே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளிநாடுகளுக்கும் அனுப்புதல் வேண்டும். எனவே, இத்தகு சிறப்பு வாய்ந்த நூலுக்கு உள்ள தடையை நம் முதலமைச்சர் அவர்கள், உடனே நீக்கி, இந்நூலைப் பட்டப்படிப்பு மாணவர்கள் படிக்கச் செய்வதுடன், பொதுமக்களுக்கும் கிடைக்கும்படி விற்பனைக்கும் கொணர்தல் வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். இந்நூலில் கூறப்பெறும் செய்திகளும் வரலாற்று நிகழ்ச்சிகளும் கருத்துவேறுபாடுகளுக்குரியனவாகவிருப்பின், அவற்றை அறிஞர் முன் வைத்துத் தேர்வுக்கு விடவேண்டுமேயன்றி, ஒரு கருத்து இங்குள்ள ஒரு சாரார்க்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அடியோடு அதைத் தடைசெய்துவிடுவதென்பது, குடியரசமைப்பையே குழி தோண்டி புதைப்பதாகும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இனி, அடுத்து, முன்னைய தி. மு. க. அரசு தன் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழிக்கும், இனத்திற்கும் செய்த சிறப்பான சில செயல்கள் சுகாதியா, சுப்பிரமணியம், தாவே ஆகிய ஆரிய பார்ப்பனரின் ஆட்சிக்காலத்தில் திட்டமிட்டுத் தடை செய்யப்பட்டும் தவிர்க்கப் பட்டும் உள்ளன. அவற்றுள் ஒன்று இங்குப் பள்ளி மாணவர்களுக்கான தமிழ்ப்பாடப் பொத்தகங்களில் உள்ள செய்தி நீக்கமாகும். தேசிய உணர்ச்சியை வளர்க்க வேண்டுமென்னும் கரணியத்தைக் காட்டி, இம்மாநிலத்தின் தாய்மொழி வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் திரையிட்டு மறைப்பது பொல்லாத குறும்புத்தனமான நிகழ்ச்சியாகும். இவற்றைத் 'தேசவிரோதம்' என்று சொல்வது, தமிழின மக்கள் என்றோர் இனமக்களையே 'தேசவிரோதம்' என்று கூறுவதற்கொப்பாகும். அவர்கள் நீக்கிய பாடப்பகுதிகள் சிலவற்றையும் அவற்றுக்குப் பகரமாக அவர்கள் சேர்த்துள்ள புதிய பாடப்பகுதிகளையும் கீழே தருகிறோம். அவற்றை நம் அமைச்சர்கள் நன்றாக ஊன்றிக் கவனித்து, அவற்றை எந்த நோக்கத்துடன் அவர்கள் நீக்கியிருத்தல் வேண்டும் என்பதை ஆய்ந்து பார்க்கக் கேட்டுக் கொள்கிறோம். அவை இவை.

வகுப்பு ;	நீக்கப்பட்ட பகுதி.	புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதி.
1,	பாவேந்தர் பாடல் [அமிழ்தே அமிழ்தே]	நம் நாட்டுத்தலைவர்கள்— பாடம், காந்தி, ஜவஹர்லால் [நேரு
2.	வ. உ. சி. -பாடம்	ஜவஹர்லால் நேரு. - பாடம்
3.	பாவேந்தர் பாடல். [எலிகளின் தொல்லை]	கவிமணி பாட்டு.
4. 1.	நமது தாய்மொழி -பாடம்	நமது பாரதநாட்டுப்- [பிரதமர். -பாடம்

2,	பாரதிதாசனுர். -பாடம்	பாரதியார். -பாடம்
3.	பொங்கல் விழா. -பாடம்	தீபாவளி. -பாடம்
4,	திரு வி. க, -பாடம்	—நீக்கம்—
5,	புத்தரும் ஆயர்குலச் சிறுவனும். [தீண்டாமை விலக்கல் கருத்துப் பாடல்]	—நீக்கம்—
6	கண்ணகி வழக்குரை காதை, -பாடல்	குந்தியும் கர்ணனும் -நாடகம்
7.	சிங்கம் முழங்கும்,	சிங்கம் கர்ச்சிக்கும்.
5. 1.	பழந்தமிழ் நாடு,	—நீக்கம்—
2,	இரட்டைப் புலவர்கள்- -பாடம்	—நீக்கம்—
3.	இசையும் இசைக் கருவி களும்-பாடம்	—நீக்கம்—
6. 1,	மொழி-பாரதிதாசன்- -பாடல்	மொழி-நாமக்கல்லார்-பா
2.	பரணர்-இலக்கிய நாடகம்.	1, குடியரசுத் தலைவர்-பாடம்
3,	தமிழ்ப்பெரும் புலவர்கள்- (வள்ளுவர், இளங்கோ, கம்பர் பற்றிய-பாடம்)	2, அன்றுகொடுத்த ஓலை-பாடம் [அந்தணர்-வேதியர்-மறையோர் கூற்றை மெய்ப்பித்தல் கருத்துடையது] 3, சேலம் விஜயராகவாச்சாரியார் -பாடம்
7 1.	தாய்மொழிப்பற்று- -பாடம்	சர்தார் வல்லபாய் படேல்- -பாடம்
2,	தமிழுக்குத் தலை தந்தவன்- என்ற பாடத்தலைப்பை	குமண வள்ளல் என்று மாற்றியுள்ளனர்.
3.	—	1. காஞ்சி என்ற முன்பிருந்த பாடத்துடன்
	—	காசியையும் இணைத்துள்ளனர். 2. எஸ், சீனிவாச ஐயங்கார். -பாடம்
4.	யாதும் ஊரே யாவரும்- கேளிர்;- கணியன் பூங்குன்றனுர்-பாடல்	—நீக்கம்—
8. 1.	புரட்சிக்கவி- பாரதிதாசன்-பாடல்	1. ஆசிய ஜோதி- கவிமணிபாடல்
2.	கற்றலில்கேட்டலே- நன்று- (கட்டுரை)- நீலாம்பிகை- அம்மையார்.	2. சக்கரவர்த்தி இராஜகோபா- [லாச்சாரியார் -பாடம்

3. கங்கை கொண்ட
சோழன்.

3. சி. என். முத்துரங்க
[முதலியார்.

4. மனிதனுக்கு மனிதன்-
[சிறுகதை]

4. புரட்சி வீரன் பகத்சிங்.

இப்படித் தமிழ்மொழி உணர்வு, தமிழ்ப்பண்பாடு, தமிழ் வரலாறு முதலிய அனைத்தும் மறைக்கப்பட்ட நிலையில்தான், இந்திய தேசியத்தைப் புகுத்த முடியும் என்று அவர்கள் கருதுவார்களானல், நமக்கு இந்திய தேசியந்தான் எதற்கு என்னும் ஒரு கேள்வி விரைவில் தோன்றவே செய்யும் என்று அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறி விட்டார்கள் என்றே சொல்லலாம். "இந்தியாவின் மற்ற பகுதிகள் செல்லும் பாதையில் தமிழ்நாட்டையும் திருப்புவதற்கு இப்பாடப் பகுதிகள் குந்தகமாக உள்ளன" என்று கருதி அவர்கள் இவற்றை நீக்கியுள்ளதாகக் கூறுகிருர்கள். அவ்வாருனல் நம் தனிப்பண்பை அவர்கள் அழிக்க முற்பட்டு விட்டார்கள் என்றே நாம் நினைக்கவேண்டியிருக்கும். இந்நிலையில் நம் அ. இ. அ. தி. மு. க. அமைச்சர்கள் என்ன கருதுகிருர்களோ?

அவர்கள் நீக்கப்பெற்ற இப்பாடப்பகுதிகளை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்வதோடு இன்று அமைகின்ருேம். அடுத்து அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்த்து அவர்களைப்பற்றியும் அதன் பின் நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் பற்றியும் முடிவு கட்டுவோம்.



'உதயசூரியன்'—வாழ்க!

உரத்தநாடு, தென்மொழியன்பர், திரு. ப. இளம்வழுதி அவர்கள் தம் துணைவியாருக்குக் கடந்த 24—7—77 ஞாயிறு காலை 10 மணி யளவில் பிறந்த ஆண் குழந்தைக்கு 'உதயசூரியன்' எனப் பெயரிட்டதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 10 நன்கொடையாக விடுத்துள்ளார். குழந்தை 'உதயசூரியன்' எல்லா வகை நலமும் பெற்று வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

முத்துச்செல்வன்—செம்பியன் வாழ்க!

வெங்காலூர், தென்மொழியன்பர் திரு. முத்துச்செல்வன் அவர்களின் துணைவியார்க்குக் கடந்த ஆடவை மாதம், மூன்ரும்மகவாகப் பிறந்த ஆண் குழந்தைக்குச் செம்பியன் என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழிக்கு உருபா. பத்து நன்கொடையாக அளித்துள்ளார். முத்துச்செல்வன்-செம்பியன் பல்லாற்ருனும் இனிது வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

வானொலிப் பொறுப்பாளர் பார்வைக்கு !

அ'தென்ன 'ஷென்னை'---?

இப்பொழுதுயெல்லாம், சென்னை வானொலியிலும் சரி, தில்லி ஒலிபரப்பிலும் சரி சென்னை என்று சொல்வதில்லை; ஷென்னை என்றுதான் சொல்கிறார்கள், இல்லையானால் ச்சென்னை என்று 'ச' வை அழுத்திச்சொல்வார்கள்.
அதேபோல்,

பாரதம் என்பதைப் பா.ஃ.ரதம் (Bhah-ratahm) என்றும்
பசி என்பதைப் பஷி என்றும்,
இசையமுதம் என்பதை இஸையமுதம் என்றுமே கூறி
மனநிறைவு பெறுகிறார்கள்.

இவர்கள் எங்கே தமிழ் கற்றார்களோ தெரியவில்லை, சோம்பலாலோ, சரியான ஒலிப்புத் தெரியாமலோ அப்படிச் சொல்கிறார்களோ என்று முதலில் நினைக்க வேண்டியிருந்தது. பின்னர் தான் அவர்கள், முடிந்தவரை, தமிழ்ச்சொற்கள் எல்லாவற்றிலுமே சமசுக்கிருத ஒலியைப்புகுத்த வேண்டும் என்னும் கரவான எண்ணத்துடன் திட்டமிட்டு ஒலிச்சிதைவு செய்து வருகிறார்கள் என்பது தெரிய வந்தது. இனி இன்னும் சிலதவறான சொல்வழக்குகளையும் இவர்கள் கையாளுகிறார்கள். அவற்றுள், 'தாற்காலிகம்' என்பதொன்று. தற்காலிகம் என்பதே ஒருவகையில் தவறான வழக்கு. தாற்காலிகம் என்பது எந்த மொழியாசிரியன் கண்டு பிடித்ததோ, தெரியவில்லை. ஆங்கிலத்தில் இவ்வாறெல்லாம் ஒலிச்சிதைப்பும், மொழிச்சிதைப்பும் செய்தால், ஏற்பார்களா ?

இராஜிநாமா என்பதைப் பதவிவிடுப்பு என்றோ,
காரியக்கமிட்டி என்பதைச் செயற்குழு என்றோ,
அரசியல் சாஸனம் என்பதை அரசியல் அமைப்புறுதி
[என்றோ,
பார்லிமெண்டு என்பதைப் பாராளுமன்றம் என்றோ,
பிரதம மந்திரி என்பதைத் தலைமையமைச்சர் என்றோ,
தூர்தர்ஷன் என்பதைத் தொலைக்காட்சி என்றோ,

—இவர்கள் அத்துணை எளிதில் சொல்லி விடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இவர்கள் உள்ளங்களில் அத்துணையளவு தமிழ்வெறுப்புக் குடிகொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம். ஆனால், தூயதமிழ் ஒலிப்பு முறைகளையும் இவ்வாறு வரிந்துகட்டிக்கொண்டு சிதைக்க முன் வந்து விட்டார்களே, —இதைக்கேட்கக்கூட எவருக்கும் துணிவோ, தகுதியோ, அக்கறையோ இல்லையா, என்பதே நம் வருத்தம்.

உலகத் தமிழ்க் கழக 4-ஆவது பொது மாநாடு.

சென்னை.

உ. த. க. உறுப்பினர் அனைவர்க்கும் சிறப்பாக மாவட்ட அமைப்பாளர்க்கு அறிவிப்பு.

கடந்த ஐயாண்டாக உ. த. க. ஆட்டை விழாக்கள் நடைபெறுமையால், இவ்வாண்டு நடைபெறவிருப்பதை மிகச்சிறப்பாக நடத்துதல் வேண்டும். அதில், தமிழக முதல்வர், கல்வியமைச்சர், கட்சித் தலைவர், திருமடத்தலைவர், பேராசிரியர், பேராராய்ச்சியாளர், பேரறிஞர், பல்கலைக்கழகத்தலைவர் முதலிய பேரதிகாரிகளும், பெருமக்களும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

முதல்நாள் பெரிய ஊர்வலமும், இரண்டாம் நாள் சிறந்த இசையரங்கும் நிகழலாம். சிறந்த தலைப்புகள் பற்றிக் கருத்தரங்கும், பட்டிமன்றமும் நடைபெறும். (சை. சி. நூ. ப. க. நூற்காட்சியும் காட்டப்பெறும்.)

இவ்விழாவை எண்ணியவாறு சிறப்பாக நடத்துவதற்கு ஏராளமாகப் பொருள் வேண்டும். ஆதலால் மாவட்ட அமைப்பாளர் தத்தம் மாவட்டங்களின் சார்பில் கீழெல்லையாகத் தனித்தனி உருபா. 1000/- தண்டி அளித்தல் வேண்டும். வட்ட அமைப்பாளரும், தனியூரமைப்பாளரும், தமிழ்ப்பற்றுளரும் மாவட்ட அமைப்பாளர்க்கு ஒத்துழைத்தல் வேண்டும். துலை 5-இற்குள் மாநாட்டுப் பொருளாளர்க்கு மாவட்ட அமைப்பாளர்கள் தனித்தனி உருபா 500/- அனுப்பிவிடல்வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறினால் தாமாக விலகிக்கொண்டவராவர்.

காலம் குறுகியிருப்பதால், உடனே தண்டலில் ஆழ்ந்தூடுபடுக. பற்றுமுறிப் பொத்தகங்களைப் பொதுச் செயலாளரிடமிருந்தும், பொருளாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னை,
தி. பி. 2008
கடகம் 25

இம்மாதச் சிறப்பு மடல் ;

0:538 ; நயவுரைகள் தேடிக்கொழிக்கும் நற்றமிழ்ப் பாவல, இனிய வணக்கம். கழகக்காலப் புலவர் பெருமக்களைப் போன்றே, தாங்கள் இக்கால ஆட்சியாளர்க்குத் திரவிட மரபு காக்க ஆசிரிய வுரை வாயிலாக அரிய ஆய்வுரை வழங்கியிருந்தீர்கள். பல்வகை நோக்கங்கள், பொருள், பெயர், விளம்பரங் கருதி வெளியிடப் பெறும் இதழ்களும், பொருளுக்காக மொழியையும், பண்பாட்டையும் விலை போக்கும் இதழ்களும், பகுத்தறிவு, தன்மானம் நெஞ்சுரமின்றி வழக்கம்போல் ஆட்சியாளர்க்கு வாழ்த்துப்பாப்பாடி வரவேற்கையில், தாங்கள்மட்டும் வரவேற்புக்குரிய ஆட்சியாளர்கள், பாராட்டுக் குரியராதல் வேண்டும், என அஞ்சாது எடுத்துரைத்து, மொழி, இனம், நாடு ஆகிய முப்படிநிலை முன்னேற்றமே இக்கால ஆட்சியின் முழு முதற் கொள்கையாயிருத்தல் வேண்டுமெனவும் கூறியிருந்தீர்கள். பிறருக்காகத் தம் நோக்கையும், போக்கையும், அடிக்கடி மாற்றிக் கொள்ளும் அடிமைத்தமிழர் மலிந்த இக்குமுகாயத்தில், தாங்கள் மட்டும் கொண்ட நோக்கிலும், போக்கிலும் இறையளவும் நெகிழாது நீக்கரிதாந் துன்பங்கள் தாக்கியகாலையும், தாயெழிற்றமிழையும், பண்பாட்டையும் மறந்து தன்னலச்சேற்றில் விழுந்து, விடுபட விய லாமல் கிடக்குந் தமிழினத்தை மீட்டுத் தெய்வத்தமிழ் மணமும், தூய பண்பாடும், ஒழுக்க நல்லுணர்வும், கட்டமைந்த நல்வாழ்வும் அளித்து வாழ்விக்கத் தாழாது உழைக்கின்றீர்கள். தங்களது நீண்ட நெடும் பயணத்தினிடையிலே "உறவினால் அழியநேரினும், உயர்வென்றே கருதியமைவேன்" எனவும் உரைக்கின்றீர்கள்.

நிலையான வருவாய் தரத்தக்க அரசுப் பணியும், மொழி, இன நாட்டுத் தொண்டுக்காக உதறியெறிந்துவிட்டு, மன, வினைத்திட் பத்தோடு தொண்டாற்றுகின்ற துணிவு யாருக்கும் வாராது. பிறர் மனம் மகிழப் புகழ்பாடி, புரையேறிய பழங்குமுகாய மூடக்கருத்து களைப் புகுத்திப் பொழுது போக்குக்காகத் தாங்களும் எழுதிக் குவித் திருந்தால் தங்கள் வாழ்க்கை நிலையே மாறிப்போயிருக்கும். ஏடும் எழுதுகோலும் பெற்ற எல்லாரும் அவற்றால் பிழைக்கும் வழியைக் கண்டு, பொருள் தொகுத்து வளமனைகள் அமைத்து, இன்பந்துய்க்க, தாங்கள் மட்டும், ஏனோ, இத் தமிழினத்தை மேம்படுத்தியே தீருவேன் எனத் தன்னம்பிக்கை மிக்குத் 'தென்மொழி' ஏடெடுத்துப் பீடுபெற நிமிர்ந்து நிற்கின்றீர்கள்.

தங்களது அறிவாற்றல், அஞ்சாமை, வினைத்திறம் முதலாய வற்றைக் கண்டு வியக்கின்றேன். ஏன்? வணங்குகின்றேன்; வாழ்த் துரைக்கின்றேன், 'தென்மொழி' இதழ் சிற்றூர்தொறும், பரவினால் அனைவருந் தூய மொழியறிவுபெற்று மேம்பாடுறுவர். அங்கெல்லாந் தென்மொழியன்பர்கள் இன நலம் பேண நனிமுயலல் நன்று. இல்லை யேல், தூயதமிழ் நாளிதழ் ஒன்றைத் தாங்கள் தொடங்கினால், மொழி, இன, நாட்டு நலக்கருத்துகள் தன்மானமிழந்த தமிழ ரிடையே விரைந்துபரவும். நம் குறிக்கோளும் நிறைவுறும். இன்றை ஆட்சியாளர் குறுகிய காலத்தில் அரசுக்கட்டில் ஏறத் துணை புரிந்தன வற்றுள் நாளிதழும் ஒன்றென்றால், நாளிதழின் வலிமையை என் சொல்வது? ஆகலின், ஐயா அவர்கள் விரைவில் தூயதமிழ் நாளிதழ் ஒன்று தொடங்கவேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

—பெரு, தமிழ்வேந்தன், பவானிசாகர்.

பாவேந்தர் விழாப்பாட்டரங்கம்!

பெருஞ்சித்திரனார்

[கடந்த விடை 2 (15—5—77) அன்று பகுத்தறிவாளர்கள் சார்பில் வேலூர் நகர மன்ற அரங்கில் நடைபெற்ற பாவேந்தர் பிறந்த நாள் விழாவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த பாட்டரங்கத்தின் தலைமையுரை]

முன்னுரை

பேரன்பு மிக்கவரே! பெரியோரே! எம்மைப்
பெற்றதமிழ்த் தாய்க்குலமே! இளைஞர்களே! வணக்கம்.
சேரனொடு சோழனும்நற் பாண்டியனும் சேர்த்துச்
செந்தமிழை வளர்த்தகதை பழங்கதையாய்ப் போக,
வீரமிலா தன்புமிலா தார்வமும்இல் லாது
வீண்பகட்டுக் காரர்களாய் நாம்வாழும் போதில்,
'யாரவன்காண் எந்தமிழைப் பழித்தவன்'என் றொருவன்
இடிக்குரலின் வீறுவெழுப்பி எழுகளிறாய் வந்தான்! 1

இராவணனைச் சாய்த்தஇனம் - எந்தமிழ்மா வீரன்
இரணியனை ஒழித்தகுலம்—ஏற்றமிகு நூலால்
பராவியநம் முன்னோர்கள் வளர்த்திமைபோல் காத்த
பசுந்தமிழைத் தாழ்த்தியதோர் பழிவடவக் கூட்டம்-
விராவியநம் பெருமை யெலாம் அடிவெட்டி வீழ்த்த
வீணர்குலம் - நம்நாட்டை வளைத்தழித்த பின்னைத்
திராவிடர்நம் திருநாட்டை மீட்பதற்கிங் கொருவன்
தெள்ளுதமிழ்ப் பாப்பாடி உயிர்த்தெழுந்து வந்தான்! 2

இன்னலிலே நாம்துயின்ற இழிவுநிலை கண்டே
'எழுந்திடுக தமிழினமே தமிழினமே' என்று
மின்னலிலே உயிர்கிளர்ந்து மேனியெல்லாம் பாயும்
மெட்டெடுத்தே உளம்புதுக்கும் உயிர்ப்பாட்டைப் பாடிக்
கன்னலிலே தமிழ்பிசைந்து காதினிக்கக் கூவிக்
கருத்தூட்டி உணர்வூட்டித் தமிழ்மறமும் ஊட்டித்
தென்னவரின் சூம்பிவிட்ட தோள்களிலே வீரம்
தெறித்தொளிரச் செய்யவொரு தீம்புலவன் வந்தான் 3

பாழெடுத்த சொற்களிலே பைந்தமிழைக் கொல்லும்
பச்சைவெறிப் பாடல்களைப் பாடும்நரிக் கூட்டம்
காழெடுத்த ஓசையிலே காதறுந்து நின்ற
காலத்தில்—நேரத்தில்—ஈங்கொருவன் தோன்றிச்
சீழெடுத்த வரலாற்றைப் புதுப்பிக்க எண்ணிச்
செந்தமிழிற் சொல்லெடுத்துத் தேனினிமை சேர்த்தே
யாழெடுத்துப் பாட்டிசைத்தான் அவன்புகழைப் பாட
யாப்பொன்று போதாது; பாத்தோப்பே வேண்டும்! 4

பூவேந்தி மணியேந்திப் பொலிவேந்தி இளமை
பூரிக்கும் மார்பேந்தி கிளிமொழியும் தோற்கும்
நாவேந்தி இளஎகின நடையேந்திக் கலையின்
நலனேந்தி நச்சரவம் பெண்களின்பேர் ஏந்தி
மூவேந்தைச் சாய்த்(து)அவர்பால் ஆரியத்தை ஊன்றி
முன்னிருந்த தமிழ்க்குலத்தின் சீர்சாய்த்த பின்னைப்
பாவேந்தாய் அக்குலத்தைக் காத்திடற்கு வந்தான்!
'பாரதிதா சன்' அவன்பேர்! பாவுலக வேந்தன்! 5

ஆரியர்பால் ஆங்கிலர்பால் வேற்றினத்தார் பலர்பால்
அழகுதமிழ் சிக்கியதன் சொல்திரிந்து பொருளும்
பூரியர்தம் வடமொழியால் உட்சிதைந்து பலவாய்ப்
புல்லுருவம் கொண்டுநமின் உள்ளுணர்வும் போக்கி
நேரியலா மறைமுகமாய் இனமழியும் போதில்-
நெட்டுயிர்த்துத் தமிழரெலாம் தத்தளிக்கும் நாளில்
சீரியசெம் பாவிசைத்தே இனம்புதுக்க வந்தான்!
செந்தமிழ்பா ரதிதாசப் பாவேந்தன் என்பான்! 6

'தமிழியக்கம்' தொடங்கிவைத்தான்! செயல்முறைகள் தந்தான்!
தப்பறைகள் கிழிந்தெறிந்தான்; தமிழ்முரசம் ஓச்சி!
அமிழ்தூற்றாய்ப் பாப்பெருக்கி 'அழகின்சிரிப்' பீந்தான்!
அழியாநல் இலக்கியமாம் 'குடும்பவிளக்' கென்னும்
கமழ்தரும்இல் லறநூலைக் கற்கண்டில் தோய்த்துக்
கசிகின்ற தீந்தமிழால் நாம்சுவைக்கத் தந்தான்!
உமிழ்கின்ற கொச்சைநடைப் பாவலர்தம் வாய்மேல்
உலக்கையடி தந்துமனம் கலக்குறவே வாழ்ந்தான்! 7

'பாண்டியனின் பரிசீ'ந்தான்! 'கழைக்கூத்தி காதல்'
'பாத்தொகுப்பு', 'நாடகங்கள்,' 'எதிர்பாரா முத்தம்'
மூண்டதமிழ் கொழித்துவரும் 'இசையமுத' நூல்கள்!
மொய்க்கும்'இளை ஞர்விரும்பும் இலக்கியங்கள்', 'சேர
தாண்டவமும்' 'நற்காதல் நினைவுகளோ' 'டமைதி'
'நல்லதீர்ப்' பெனும்நூலோ டின்'குறிஞ்சித் திட்டு'
கீண்டெழுந்த 'சௌமியன்''கண் ணகிபுரட்சிக் காப்பியம்'
கெழு 'மணிமே கலைவெண்பா' எனும்பலநூல் தந்தான்! 8

தாயின்மேல் ஆணையிட்டான்! தந்தையின்மேல் ஆணை-
தமிழகமேல் ஆணையிட்டான் செந்தமிழைக் காக்க!
தூயதமிழ் வளர்த்திடுவீர் தோழரீர்என் றிசைத்தான்!
தொல்தமிழர் நாடியெல்லாம் நரம்பெல்லாம் மீட்டி
ஏயநறுந் தமிழுணர்வை ஓடவிட்டான்! தமிழை
'இகழ்ந்தவனைத் தாய்தடுத்தா லும்விடே'னென் றார்த்தான்!
நாயினுங்கீ ழாய்த்தமிழர் நலிவதுகண் டுள்ளம்
நைந்துருகி 'உடல்தருவேன் உயிர்தருவேன்' என்றான்! 9

வெண்ணிலவும் வானும்போல் வீரனும்வா ளும்போல்
விரிவண்ணப் பூவும்அதன் மணமும்போல். யாழும்
பண்ணிவரும் இசையும்போல், கண்ணும்ஒளி யும்போல்
பைந்தமிழும் தானும்எனப் பண்ணிசைத்துப் பாடி
எண்ணிலவர் உணர்வுளத்தில் செந்தமிழ்த்தீ மூட்டி
எரிகின்ற நெஞ்சின்மேல் - செந்தமிழ்மேல் ஆணை
பண்ணியினப் புரட்சிக்கு நெய்யூற்றி விட்டான்!
பாவேந்தன் பாரதிதா சன்புரட்சி வேந்தன்! 10

மூவேந்தர் மனத்தொட்டில் துயின்றெழுந்தே அன்னார்
முடிமீது காலுதைத்து மடியில்விளை யாடி
நாவேந்தும் முக்கழகப் புலவர்கைத் தவழ்ந்து
நம்காலில் நசுக்குண்டு குற்றுயிராய்க் கிடந்தும்
சாவேந்தா நத்தமிழ்த்தாய் தனைப்பாடிப் பாடிச்
சலிப்படையாப் புலவன்பா ரதிதாசன் என்னும்
பாவேந்தன் திருவுளத்தின் கருத்துநலன் யாவும்
பாவலர்க்கோ உணர்வூற்று! கருத்துமழை! செந்தீ! 11

இயற்கையினில் அவன்தொட்ட இடமெல்லாம் சிரிக்கும்!
இனப்பேச்சில் அவன்மூச்சின் துடிதுடிப்பும் கேட்கும்!
மயற்கையிலாச் சீர்திருத்தம் அவன்பாட்டில் மணக்கும்!
மருண்டிருண்ட நாட்டில்அவன் பாவிளக்கை ஏற்றும்!
முயற்கையைத் தீண்டுதற்குள் முகம்வெயர்த்துக் கொட்டும்
மோழையனின் கோழைமனம் அவன்பாட்டைக் கேட்டால்
பெயற்கைமழை மேகமெனும் பெருங்களிற்றின் தலையைப்
பெயர்த்தெடுக்கும் எண்ணம்வரும் வீரம்வரும் என்பேன்! 12

அவன்பாட்டில் தமிழ்பொழிந்த அமிழ்தமழை போல
அன்றிருந்திந் நாள்வரைக்கும் அணியணியாய் நிற்கும்
எவன்பாட்டில் தமிழ்பொழிய நாம்கண்டோம்? கேட்டோம்!
இதுவரைக்கும் இருந்ததில்லை; இனிமேலும் இல்லை!
சிவன்முதலாய் விற்றிருந்த கழகமெனச் சொன்னார்!
செந்தமிழ்மேல் பாவேந்தன் உயிர்கிடந்து தூங்கி
உவந்துநிறை வுற்றதுபோல் ஒருபுலவர் வாழ்வும்
ஓ! ஓ! ஓ! எனவியந்து போற்றும்படி இல்லை! 13

'கரும்புதந்த தீஞ்சாறே, கனிதருவின் சுளையே
கவின்முல்லை வெண்ணகையே 'எனும்பாட்டில் தமிழை
விரும்பியவன் 'அன்பே, அன் பே!யன்பே!' என்று
விளித்திடுங்கால், உயிருடலம் அணைத்துந்தமி ழாக
அரும்பிமலர்ந் துலகமெலாம் அளாவியிருப் பதுபோல்
அரியவுணர் வொன்றுநம்மின் உள்ளத்தில் தோன்றும்!
பெரும்புதுமை இதுவன்றே? எப்புலவன் தமிழை
பேச்சுக்கும் மூச்சுக்கும் 'அன்பே'என் றழைத்தான்? 14

இவ்வாறுப் பாவேந்தன் கருத்துநலன் எல்லாம்
எடுத்தெடுத்து நீங்களெலாம் சுவைக்கும்படி ஈவர்,
இவ்வாறு தமிழ்ப் புலவர்—இன்றமிழ்ப்பா வாணர்;
இருந்துநலங் கேட்டிடவும் யான்வேண்டு கின்றேன்!
ஒவ்வாத பாடல்பல கேட்டிருப்பீர்! உங்கள்
உள்ளமெல்லாம் நாறடிக்கும் அப்புலவர் கூட்டம்!
அவ்வாறுய் இப்புலவோர் பாடஅறி யார்கள்!
அருந்தமிழ்க்கே ஒளிசேர்க்கும் புலவரிவர் காண்பீர்! 15

(தொடரும்)

உலகியல் நூறு.

—பெருஞ்சித்திரனார்—

[மொழிபெயர்ப்பு : த. முத்துக்குமரன், க. இ.]

15. புகழியல்

1. அறிவு நிலை.

கரணம் கருமம் கருவியெனும் மூன்றின்
முரணின் றுயிர்க்கு முகிழ்த்து—நிரனிறையாப்
பாகின்றி நீண்டஃகித் தன்துணையோ டுட்கரணத்
தாகி இயலும் அறிவு.

பொழிப்பு : காரணியநிலை, கருமநிலை, கருவிநிலை என்னும் மூன்று நிலைகளும் தம்முள் மாறுபாடு கொள்ளாமல், உயிர்களிடத்து வெளிப்பட்டுத் தோன்றி அவற்றின் உட்பகுப்புகளாய் வரிசை முறைகளாகப், பகுப்பில்லாதபடியாகவும் நெடிதும் குறுகலும் என்னும் படியாகவும், தற்கருவியும், துணைக்கருவியும், காரணியக் கருவியும் என்னும் படியாகவும், விளங்குதல் பெற்று, இயல்கின்ற தன்மையுடையது அறிவு. (71)

அறிவு இயல் நிலை

1. காரணிய அறிவு — (பாகில்லாதது) பிரிவில்லாதது.
(Knowledge of reasons)

2. கரும அறிவு (Knowledge of doings)
   1. நெடிய நிலை (நீண்டநிலை)
   2. குறுகிய நிலை (அஃகிய நிலை)

3. கருவி அறிவு (Knowledge of things)
   1. தற்கருவி நிலை
   2. துணைக்கருவி நிலை
   3. காரணியக் கருவி நிலை

15. ON RENOWN.

1. OF KNOWLEDGE.

Cause, work, instrument are states three
From which as aid to our life free
Sprouts our knowledge as big and short
Without contradiction of a sort. (71)

Cause, work and tools are the three stages from which, if they are in unison, sprouts our intelligence, first without any distinction, to later on develop into big, small, primary, secondary aids to shine.

2. அருள் நிலை.

அருளென்ப துள்ளத் திறைமையது பெற்ருர்க்
கிருளில்லை எஞ்ஞான்றும் என்ப—கருள்மனத்தர்
அன்பறியார் என்றும் அருளறியார் ஆழ்ந்தகன்ற
இன்பறியார் ஏந்தும் இடர்.

பொழிப்பு :- அருள் என்பது உள்ளத்தின் இறைமை நிலை. அந்நிலை வரப்பெற்ருர்க்கு உலகியலான் கவிழும் இருள் நிலைகள் எந்நிலையிலும் படிவதில்லை என்பர். உலகியலில் மூலநிலைகளைத் தெரிந்துணராத கரிய மனத்தை உடையவர்கள் அன்பையே உணர மாட்டாதவர்கள். எனவே அத்தகையவர்கள் என்றைக்கும் அருளை உணர வியலாதவர்கள். ஆகலினுல், ஆழம் உடையதும் அகற்சி யுடையதுமான இன்பநிலைகளை அவர்கள் உணரவியலாது. உலகியல் துன்பங்களையே அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் (72)

2. OF GRACE.

Grace is godliness of the heart.
To these darkness shall be no part.
Dark heart'll ne'er konw of grace.
Or lasting joy but sorrow trace. (72)

Grace is the godly state of the heart. Those who have this in full measure shall never know the darkness that shall envelop those of evil heart which knows not the origin of the world and lacks love. As such they can never know of grace. So they can never know the breadth and depth of the joyous state. Necessarily they have to suffer in the world.

3. அமைவு நிலை.

இடர்நிலை என்றும் இயல்பன்று யார்க்கும்
படர்துயர் உண்டதுவே பான்மை—தொடர்துயரம்
உற்ருரும் பின்னை உயர்வெய்தும் உள்ளமைவு
பெற்ருருக் கின்பம் பெரிது.

பொழிப்பு :- உலகியலான் வரும் துன்பநிலை என்றுமே இயல்பாக இருப்பது அன்று. பிறவியுற்ற எத்தகையார்க்கும் அவ்வந் நிலையான் படர்கின்ற துயரம் உண்டு. அதுவே இயற்கைத் தன்மை யாம். தொடர்ந்த துன்பங்களை அடையப் பெற்றவர்களும் பின்னொருகால் அவை நீங்கி மேம்பாடடைவர். எனவே அத்துன் பங்கள் வருமிடத்து, அவை நீங்குதல் உறுதி என்று உள்ளம் அமைந்திருக்கப் பெற்றவர்க்கே இன்பநிலை அளவின் மிகுதியாகும் என்க. (73)

3. OF TRANQUILITY.

To suffer long is uncommon ;
Pain in each stage one cannot shun.
Even such may rise high one day;
Joy will peace of mind surely pay. (73)

Suffering in worldly life is never of a long standing nature. Human being in any stage, whatever it be, will have suffering. That is but natural. Even those who suffer continuously may later on be relieved of their suffering and be better. So when such suffering comes, those who will bear it in the firm belief that it will wear out in due course and quickly too, will have joy in good measure.

4. மான நிலை.

மனவுயர்ச்சி தாழவரல் மானம் அதுதான்
இனவுயர்ச்சி காட்டும் எழுச்சி—இனவுயர்ச்சி
உள்ளுவார்க் கில்லை உயர்மானம் ஆங்கதனைக்
கொள்ளுவார்க் கில்லை குனிவு.

பொழிப்பு :- மனம் உயர்ந்து நின்ற நிலைக்குத் தாழ்ந்து போகும்படி வருகின்ற சூழலில் ஒருவர்க்குத் தோன்றுகின்ற நல்லுணர்வே மானம் என்பது. அம்மான உணர்வுதான் தாம் தோன்றிய உயிர்க்கூட்டத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்ற ஒரு மனவெழுச்சியாகும். ஆனால் தாம் சேர்ந்த உயிர்க்கூட்டத்தின் நிலையை மேன்மேலும் உயர்த்த எண்ணுகின்றவர்களுக்கு, தம் தனிநிலைத்தாழ்ச்சியால் தோன்றும் உயர்ந்த மான உணர்ச்சி இல்லையாகும். அவ்வினத்தை உயர்த்துதலையே தம் வாழ்வாகக் கொள்ளுபவர்க்கோ, தம் தனிநிலை மானங்கருதாத நிலையால், தலைக்குனிவு நேர்வதில்லை என்க. (74)

4. ON RESPECT.

Feeling coming down is respect.
That shows race's high prospect.
Esteem cares not he who race dream
To raise will never low stage deem (74)

When circumstances lower one from a high mental state, the irrestible feeling that comes up is what we call respect. It is that feeling that indicates the growth of the race to which one belongs. Those bent upon raising their own race will never care for their low state. For those with this object, their low state in life is nothing to be ashamed of.

5. தொண்டு நிலை.

தோய்ந்தார்ப் பொருட்டுழைத்தல் தொண்டென்ப உள்ளச்சீர்
வாய்ந்தார் துணிவின் வயப்படுக—ஆய்ந்துரைக்கின்
துன்பம் இழவிழிவு தோளின்மை தூங்காமை
இன்பென்பார் ஆற்றல் இனிது.

பொழிப்பு :- தம்முடன் பொருந்தப் பெற்ருரின் கரணியமாகத் தாம் வாழ்வில் உழைப்பதையே தொண்டு என்பர். இவ் வாழ்க்கைக்குரிய வகையில் உள்ளச்சீர்மை வாய்க்கப் பெற்றவர்களே துணிந்து அதன்பால் ஈடுபடுக. ஆராய்ந்துரைப்பதாயின், துன்பத்தையும், இழப்பையும், இழிவையும், துணையில்லாமையையும், சோர்தல் இல்லாமையையும் இன்பம் என்று கொள்ளுபவர்கள் இதனை ஆற்றுதல் அவர்களின் உயிர்க்கு உவப்புடையதாகும். (75)

5. ON SERVICE

Service is work for those linked so close:
It is for the high in life to choose
Take loss, low state, no help or sleep
As joy in life will service keep. (75)

To serve those who are properly and closely connected throughout life is service proper. Those well placed in life and are noblehearted shall be deemed fit to undertake this. Well weighed, those who consider it a joy to suffer lost, be helpless and sleepless, will be immensely fitted for this.

கன்னடப் பழங்குடிகளின் அகநானூற்றுத் திருமணம்

பன்மொழிப்புலவர் **இரா. மதிவாணன்**, க. மு; இலக். இ.

பழந்தமிழரின் திருமணம் எவ்வாறு நடைபெற்றது என்பதை அகநானூற்றின் 86, 136-ஆம் பாடல்களால் அறிகிறோம். ஆனால், அந்தத் திருமண முறை சிறிதும் மாறாமல் இன்றும் சில பழங்குடி மக்களிடம் உள்ளது என்பதைப் பலர் அறியார். ஆடு மேய்த்தும் உழவு செய்தும் வாழும் கன்னடக் குறும்பர் தகடூர் (தருமபுரி) மாவட்டத்தில் பல ஊர்களில் வாழ்கின்றனர். இவர்களில் ஒரு பிரிவினர் தம்மை உப்பூரிக்குடியினர் எனக் கூறிக்கொள்கின்றனர்.

உப்பூரிக்குடிகிழான் மகன் உருத்திர சன்மன் நக்கீரரின் இறையனார் களவியல் உரைச்சிறப்பை மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கேட்டதாகத் தமிழிலக்கிய வாயிலாக அறிகிறோம். தம் முன்னோர் வாழ்ந்த பகுதி மாகுடி நாடு என்கின்றனர். இந்த மாகுடி நாடு எங்கிருந்தது என்று அவர்களுக்கே தெரியாது. மாங்குடிமருதனாரின் மாங்குடிப் பகுதி மாகுடி நாடாகக் கருதப்பட்டிருக்கலாம்.

எளியவராயினும் பொலிவுமிக்க குன்றடர்ந்த காட்டூர்களில் வாழும் இம்மக்கள் பாட்டே வாழ்வாகக் கொண்டுள்ளனர். அனைத்து நன்னிகழ்ச்சிகளிலும், பூப்பு நீராட்டாயினும், திருமணமாயினும் தெய்வ வழிபாடாயினும், அறுவடை, நெற்குற்றுதல், மாவரைத்தல் போன்ற தொழில்களாயினும், எங்கும் எப்பொழுதும் பாடி மகிழும் பண்பாட்டை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

திருமணச் சடங்குகள் பொறுத்தவரை மணவறையில் மூத்தோர் வாழ்த்தும் நிகழ்ச்சி தவிர, மூன்று நாள் திருமணச் சடங்குகள் அனைத்திலும் மகளிரே பாடுகின்றனர். மங்கல மகளிர் ஐவர் அல்லது எழுவர் தொடர்ந்து பாடப்பாடச் சடங்குகள் நடைபெறுகின்றன.

மணநாள் முழுத்த நேரம் மதியம் சகடணையும் காலம் பார்த்துக் குறிக்கப்பட்டதாகவும் புள்நிமித்தம் பார்க்கப் பட்டதாகவும் அகநானூறு குறிப்பிடுகிறது.

> கனையிருளகன்ற கவின்பெறு காலைக்
> கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
> கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென (அகம். 86)

> புள்ளுப்புணர்ந்தினிய வாகத் தெள்ளொளி
> அங்கணிருவிசும்பு விளங்கத் திங்கள்

சகட மண்டிய துகளர் கூட்டத்துக்
கடி நகர் புனைந்து கடவுட்பேணி (அகம், 136).

ஒவ்வொரு நன்னிகழ்ச்சிக்கும் புள்நிமித்தம் பார்த்தலும் மண முழுத்த நேரம் வளர்பிறை காலத்தில் குறித்தலும் இன்னும் இம் மக்களின் வழக்கங்களாக உள்ளன.

முதல்நாள் திருமண நெற்குற்றும் விழா. இதனை 'உரலக்கிதின' என்பர். இரண்டாம் நாள் காப்பு நாண், வளைதொடல், உடையேற் பித்தல் ஆகிய நிகழ்ச்சிகளைக் கொண்ட மணமனை ஒப்பனை விழா. இதனை அவர்கள் 'சப்ரதின' என்பர். மூன்றும் நாள் வைகறையில் மண்ணீராட்டு வதுவை நடைபெறும். இதுவே மங்கல மகளிர் மண மக்களை நன்னீராட்டி நிகழ்த்தும் அகநானூற்றுத் திருமண முறை. மூன்றும் நாளில் மண்ணீராட்டு, ஓதக்கி, பெருஞ்சோற்றமலை, தாலாட்டு, நகையாட்டு, தமர்தரும் தலைநாளிரவு அல்லது ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

உரலக்கிச்சடங்கு :

திருமணத்திற்காக முதல் நெல்லிடித்தலை 'உரலக்கி' என்பர். உரல் அரிசி என்பது அதன் பொருள். மாப்பிள்ளைக்கு நறுமணக்கலவை பூசி நலுங்கு வைத்துப் பாலும் பழமும் உண்ண அளிப்பர். மணமகளின் உடன் பிறந்தாளுக்குத் தேங்காய்க் கொப் பரையும் புத்தரிசியும் தருவர். உரலையும் உலக்கையையும் வழிபட்டு மங்கல மகளிர் பாடியவாறே நெல்லிடிக்கத் தொடங்குவர்.

பிதுரு பெட்டதமேலே சதுரங்க ஓலே ஊடி
பிதுருநெல்லொய்து உரலக்கி தொளசாக
மாமன மகனே நெரபாரோ.
மாகுடி நாடு உரலக்கி தொளசாக
மாமன் மகனே நெரபாரோ.
சுவிபாசு சுவிபா சுவிபாசு சுவிபா
கல்யான நம்ம மணமுந்தே அக்கைய
பாலசப்ரான மதிவந்தே.
ஆகைஒணகெ ஈகை திருகுத்த தாதிய தோளு திருகுத்த
உப்பூரி குல சன்ன கண்ணன மதிவந்தே

தாய்மாமன் மகனை நெல்லிடிக்கத் துணைவருமாறு அழைப்பர். தாய்மாமன் மகன் வந்து நெல்லிடித்தலைத்தொடங்கி வைப்பதுண்டு. இப்பாடலில் வெதிர்நெல்லை(மூங்கில் நெல்லை) மகளிர் இடிப்பதாகவும்

இவர்கள் மாகுடி நாட்டார் என்றும் உப்பூரி குடியினர் என்றும் கூறப்படுதலைக் காணலாம்.

திருமண முன் ஏற்பாட்டுக்கான இத்தகைய நிகழ்ச்சிகள் அகநானூற்றில் விளக்கப்படவில்லை. திருமண நாளன்றைய நிகழ்ச்சிகள் மட்டும் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் நாள் - மணமனை ஒப்பனை :

காப்பு நாண்

இரண்டாம் நாள் மணப்பந்தல் நாள் எனப்படுகிறது. அன்று பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் காப்பு நாண் கட்டுவர். அறுகு, மஞ்சள், வெற்றிலை ஆகியவற்றை நூலால் கட்டி, முன்கையில் கட்டுவர். இதனைச் சுங்கேற்றுதல் என்பர். காப்பு நாணைத் திருமணம் முடிந்த பின் கழற்றுவர்.

காப்புநாணில் வாகையிலை அறுகங் கிழங்கின் முகை ஆகியவை கட்டியதாகக் கூறப்படுகிறது. இதன் பிறகு முளைப்பாலிகை கொணர்தல், 12 கம்பங்கள், 12கும்பங்கள், நந்தாவிளக்கு ஆகியவை அணி செய்யப்படும். மணமகளுக்கும் பிற உறவின் முறையிலான மங்கள மகளிர்க்கும் வளைதொடும் சடங்கு நடைபெறும். இதனை "பளெ தொடோது" என்பர். இதற்கான பாடல் சுவையானது. இப்பாடலில் வளையம் செட்டிக்குப் பெண் வீட்டின் அடையாளம் சொல்லப்படும். மலையில் மணப்பெண் வீட்டை எவ்வாறு கண்டு பிடிப்பது என்று கேட்கும் வளையல் செட்டிக்கு ஆற்றுப்படையாகக் கூறும் கூற்றில், மணமகளின் வீட்டின்முன் யானைகள் திரிந்து கொண்டிருக்கும்; மான்கள் விளையாடிக்கொண்டிருக்கும்; மயில்கள் வண்ணத் தோகை விரித்தாடிக் கொண்டிருக்கும் என்று இவ்விடச் சுழல் கூறப்படுகிறது.

வளைதொடல்

ஆனெக ளாடுத்த கணகளு திருகுத்த
சோகே பண்ணத நவுலு குனியூத்திருவுது
அது காணே அண்ண நம்ம தருவு (தருவு-தாய்வீடு)
ஒகி பாராலண்ண பளெ செட்டி.

வீடுதேடி வரும் வளையல் செட்டியை மணமகள் வீட்டு மகளிர் வரவேற்பர்.

பாணந்த அட்டியாக பாகிலாலரிசப்ர
பக்கி பாராலண்ண பளெ செட்டி நம்மனெ,
பாணத்தி கைபளெ தொடபாரோ
முத்தியான அட்டியாக முத்திலாலரிசப்ர
சுத்தி பாராலண்ண பளெசெட்டி நம்மனே
முத்தி கைபளெ தொடபாரே॥,

'பந்தலில் முத்துச்சரங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. வளை செட்டியே பந்தலைச் சுற்றி வா அல்லது குனிந்து வா. வந்து முற்றிழையார்க்கு (சுமங்கலிக்கு) வளைகொடு,' என்று வளை செட்டியை வரவேற்கிறார்கள்.

வளையல் அணிவிக்கும் நிகழ்ச்சி மிக இன்றியமையாததாகும்.

உடையேற்பித்தல்:

தமிழிலக்கியத்தில் தலைமகளுக்குத் தலைமகன் தழையுடை அளிக்கும் நிகழ்ச்சி கூறப்படும். அதுபோலவே திருமண முதல் நாளன்று மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து வந்த-மணமகளுக்கான-அவள் விருப்பத்திற்கேற்ற உடைகள், அணிகலன்கள் ஆகியவை பல இன்னியம் முழங்க அனுப்பி வைக்கப்படும். இதனை 'உடுகெ நடியோது' என்பர். உடுகெ என்றால் உடுப்பு என்று பொருள். மணமகள் தான் விரும்பத்தக்க உடைகளும் அணிகலன்களும் வந்துள்ளனவா என அறிய விழைந்து நாணி நிற்பாள், தோழிகள் அவள் விரும்பியவை அனைத்தும் வந்துள்ளதாகக் கூறுவர்.

ஓலே யில்லந்து ஓரகிசு முனிதாளே
ஓலே பந்தாதெ உடுகியாக
ஓலே பந்தாதெ உடுக்கியாக கந்தம்ம
உடையான மனசு தெளுகொள்ளே
கடக இல்லாந்து கடையோர முனுதாளே
கடக பந்தாதெ உடுகியாக
கடக பந்தாதெ உடுகியாக கந்தம்ம
கந்தப்பஞ மனசா தெளுகொள்ளே.

காதுக்கு ஓலை வரவில்லை என்று ஒரு பக்கமாகத் திரும்பி நின்றாயே இதோ உடுகெ (உடுப்புப்) பேழையில் ஓலை வந்துள்ளது. மாப்பிள்ளை வீட்டாரின் உள்ளத்தைத் தெரிந்துகொள். கடகம் இல்லை என்று கதவோரம் நின்றிருந்தாய். இதோ கடகம் வந்துள்ளது. மாப்பிள்ளை வீட்டாரின் உள்ளத்தைத் தெரிந்துகொள் என்கிறார்கள்.

மணமகள் கோடிக்கலிங்கம் உடுத்துப் பல்வகை அணி பூண்டு விளங்கும் உடையேற்பித்த நிகழ்ச்சி அகநானூற்றிலும் கூறப் படுகிறது.

“தூவுடை பொலிந்து மேவரத் துவன்றி
மழை பட்டன்ன மணல்மலி பந்தர்
இழையணி சிறப்பின் பெயர் வியர்ப்பாற்றி.”

மண நாளன்று மணமகள் தூய வெள்ளைப் புடைவை உடுத்தி, தலைநிறைய பூச்சூடி, மஞ்சள் முகத்தோடு விளங்குவாள். மணமக னுக்குத் தலையில் முண்டாசு அணிவித்துக் கையில் உடைவாள் அல் லது குத்தீட்டி தருவர். மணமக்கள் நெற்றியில் நெற்றிப்பட்டமும் கால்விரல்களில் மிஞ்சு என்னும் மோதிரமும், மாப்பிள்ளையின் வலக் காலில் காரை என்னும் கழலும் பெண்ணுக்குக் கடகம் தொடி ஆகிய வையும் உரிய அணிகலன்களாகும்.

மண்ணிராட்டு - வதுவை நன்மணம்:

பழந்தமிழரின் திருமணத்தின் இன்றியமையாத சடங்கு மண மக்களை மகளிர் அனைவரும் கூடி மலரும் நெல்லும் கலந்து நன்னீ ராட்டி வாழ்த்துவதாகும். இது மண்ணீராட்டு அல்லது வதுவை நன்மணம் எனப்படும். மகளிரே நடத்தி வைக்கும் இத் திருமணத்தை அகநானூறு பின்வருமாறு விளக்குகின்றது.

படுமண முழவொடு பருஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் (அகம். 136).

மண்ணீராட்டும் நிகழ்ச்சி மூலம் திருமணத்தை நடத்தி வைத்த மகளிர் எனும் பொருளில் ‘வதுவை மண்ணிய மகளிர்’ குறிக்கப்படு கின்றனர். அகவை முதிர்ந்த முதுசெம்பெண்டிர் நன்னீர்க் குடங்களை முறையாக எடுத்துத் தந்தனர் என்றும், புதல்வற் பயந்த வாலிழை மகளிர் (சுமங்கலிகள்) நால்வர் மணமக்களை வாழ்த்தி மங்கல நீராட்டித் திருமணம் நடத்தினர் என்றும் பின்வரும் பாடல் தெளிவு படுத்துகிறது.

உச்சிக்குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தர
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடி

கற்பினின் வழா நற்பல உதவி
பெற்ருேற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின்நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை (அகம் 86).

தகடூர் மாவட்டக் கன்னடக் குறும்பரின் திருமணத்திலும் மங்கல மகளிரே மண்ணீராட்டு வதுவையை நடத்துகின்றனர். மண நாளன்று வைகறையில் அவ்வூரிலுள்ள அனைத்து மகளிரும் தத்தம் இல்லங்களிலிருந்து, பசுந்திணை நறுமணப்பொருள்கள் ஆகியவை இட்ட வெந்நீரை மட்பானைகளில் கொணர்ந்து மணப்பந்தல் வாயிலி லிருந்து தெருவின் ஒரு மருங்கில் வரிசையாக வைப்பர். இந்நீர்க் குடங்களை வைப்பதற்காகத் தெருவோரம் நெடுகிலும் சாண எரு கொட்டி வைக்கப்பட்டிருக்கும். வீட்டிற்கு ஒரு குடம் மேனி 500 முதல் 1000 குடங்கள் வரை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். சிற்றூராயின் 100 குடங்களாவது இருக்கும்.

மணவறையில் ஒளிகான்று கொண்டிருக்கும். குடவிளக்குக்கும் மூளைப்பாலிகைக்கும் முன்னோர்க்கும் தெய்வத்திற்கும் வழி பாடாற் றிய பின் மூத்த மங்கல மகளிர் முதற்குடத்தை எடுத்துத்தர, மக வீன்ற மூற்றிழையார் (கன்னடத்தில் முத்திதியோர் எனப்படும் சுமங்கலியர்) மூவர் அல்லது ஐவர் மணமக்களை நன்னீராட்டி, பாட்டு களால் வாழ்த்தித் திருமணத்தை நடத்தி வைப்பர். இந்நிகழ்ச்சியை 'மண்ணீர்' என்றே குறிப்பர். அப்பாடல் வருமாறு.

குடானத நீரு குபுகுபுந்து காததெ
இடிரம்ம மண்ணீரு மகனிகெ
பச்சத் தினெ யக்கி கமகம
கொப்பரிகெ நீரு உக்குக்கிக்காததெ
இடிரம்ம மண்ணீரு மகளிகெ
ஏலக்கி சொண்டியக்கி கமகம
கெசரில்லத அட்டியாக கெசரேகே நின்தாதெ
எசரிகெ தொட்டோனே தலெபோகெ
பட்டணத கோடி அரிதாரே
நீரில்லத அட்டியாக நீரேகே நின்தாதெ
உரிகெ தொட்டோளே தலேபோகெ
பட்டணத கோடி அரிதாரே

"மண்பானையில் நீர் குபுகுபு என்று காய்ந்துள்ளது. நீரிலிட்ட பசுந்தினை கமகம வென்று நறுமணம் வீசுகிறது. மணமகனுக்கு மண்ணீராட்ட நீர்க்குடங்களைப் பிடியுங்கள். கொப்பரையில் ஏலம், சுக்கு முதலிய நறுமணப்பொருள் கலந்த நீர் கொதிக்கக் காய்ந்துள்ளது. மணமகளுக்கு மண்ணீராட்ட நன்னீர்க் குடங்களைப் பிடியுங்கள்.

சேறில்லாத முற்றம் சேருகி மண்ணீராட்டிய வெள்ளம் பட்டணம் வரை பெருக்கெடுத்தது. தலைமகனே! பெயர் விளங்கும் பெருமகனாக வாழ்வாயாக.

நீரில்லாத முற்றத்தில் நீர் நின்று பட்டணம்வரை பெருக்கெடுத்துள்ளது. தலைமகளே! ஊருக்கே பெருமகளாய் வாழ்வாயாக!"

தமிழிலக்கியத்தில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் தலைமகன் தலைமகள் என்பது போலவே, இம்மக்கள் தலைமகனே -- தலெபோகெ என்றும் தலைமகளே – தலெபோகே என்றும் குறிப்பிடுவது வியக்கத் தக்கது. கன்னடத்தில் மகவு–மொகு எனப்படுவது போல தலைமகன் தலைமகள் என்னுஞ் சொற்கள் ஈற்றெழுத்து குறைந்து தலைமொகு– தலெபோகு எனத் திரிந்துள்ளதாகத் தெரிகிறது. சிற்றூர் (கிராம) அதிகாரியை 'சாண்போக' என்று கன்னட மக்கள் அழைப்பதைக் காணலாம்.

பல்லியம் முழங்க மண்ணீராட்டு நிகழ்ச்சி முடிந்ததும் மணவறையில் புத்தாடை உடுத்து மணமக்கள் அமர்வர். முதியோரும் பெரியோரும் மணவிழாவுக்கு வந்த அனைவரும் மணமக்களை மலரும் மஞ்சளும் அறுகும் இட்டு வாழ்த்துவர். இந்நிகழ்ச்சி ஓதக்கி எனப்படும்.

ஓதக்கி மங்கல – வாழ்த்து.

மகளிரால் நடத்தி வைக்கப்பட்ட இத்திருமணத்தில் ஓதக்கி நிகழ்ச்சியில் மட்டும் ஆண்கள் பங்கு கொண்டு வாழ்த்துகின்றனர். தெய்வங்களை வாழ்த்தி, பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் தந்த சீர் வரிசைகளைப் புகழ்ந்து, திருமணம் யார் யார் முன்னிலையில் நடத்தி வைக்கப்பட்டது என்பதைக் கூறி, தெய்வத்தின் பெயரைப் பன்முறை ஓதி, தெய்வக் காப்புக்கூறுவதால் இது 'ஓதக்கி' எனப்பெயர் பெறுகிறது. இது திருமணத்தில் ஓதப்படும் மந்திரமாகவே கருதப்படுகிறது. சோபக்கி சோபான என்று பாடல் தொடங்குகிறது. சுப அக்கி– (நல்ல அரிசி) சோபாக்கி எனத் திரியும்.

சோபக்கி சோபான சோபக்கி சோபான
சுபன மங்கலதிந்த இத்தண்டவன தொளகே
ஏனேனு கண்டே
சம்பர ஆகோது கண்டே, மதிவெமாடோது கண்டே
அசி சப்ரவே சாட்சி அன்னெரடு கம்பவே சாட்சி
அன்னெரடு கும்பவே சாட்சி மூலெ மனயல்லி
மூறு முத்திதியோரே சாட்சி
மாதேசுவரா மல்லேசுவரா மல்லிகார்ச்சுன
நம்மிந்த சொல்லில்லையா நிம்மிந்த சொல்லு.

"நல்லரிசி நலஞ்சேர்க; நல்லரிசி நலஞ்சேர்க; மங்கலம் பெருகுக இக்குளிர்ந்த பந்தலின் கீழ் என்னென்ன கண்டாய்? பசும்பந்தலிடுவது கண்டேன். வதுவை நன்மணம் நடத்துவது கண்டேன். மணமகளை மணமகன்பால் ஒப்படைப்பது கண்டேன். இவ்வதுவைக்குப் பசும்பந்தலே சாட்சி. 12கம்பங்களும் 12கும்பங்களும், திருவிளக்கும் திருமணம் நடத்தி வைத்தவரும் அகமனையிலிருப்பவரும் ஆகிய, மூன்று மூற்றிழை மகளிரே சாட்சி. இறைவா இது என்னுடைய சொல்லில்லை உன்னுடைய சொல்."

இந்நிகழ்ச்சியின் போது ஓதக்கி மந்திரம் சொல்லச் சொல்ல மங்கல மகளிர் எடுத்துத் தரும் பொற்றாலியை மணமகளுக்கு மணமகன் கட்டுகிறான் தாலி கட்டும் நிகழ்ச்சி அகநானூற்றில் கூறப்படாவிடினும் இம்மக்களிடம் உள்ளது. இந்த ஓதக்கி மந்திரத்தை அவர்களில் யார் வேண்டுமாயினும் ஓதித்தாலி கட்டும் நிகழ்ச்சியை நடத்துகின்றனர். எந்த நிகழ்ச்சிக்கும் இவர்கள் பிராமணரை அழைப்பதில்லை.

மகளிர் பாடும் பாடல்களில் வடசொற்கள் கலவாமலும் ஆண்கள் பாடும் ஓதக்கி மந்திரத்தில் வடசொல் கலப்பும் இருப்பதை நோக்குங்கால் ஓதக்கி நிகழ்ச்சி பழையதாகவும் ஓதக்கி மந்திரம் புதியதாகச் சேர்க்கப்பட்டதாகவும் கருத இடமிருக்கிறது.

பெருஞ்சோற்றமலே – மணவிருந்து

திருமண விருந்து 'ஒக்கல் ஊட்ட' என்றும் 'பூவ உண்ணேது' என்றும் அழைக்கப்படும். பருப்பஞ்சோறும் இனிப்புணவு வகைகளும் நிறைந்திருக்கும். விருந்துப் படையல், மணவரை முன்னே மங்கலக் கும்பத்தைச் சுற்றிப் பெரிய வாழை இலைகளில் படைக்கப்பட்டிருக்கும். பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் உறவு முறையினர்

அனைவரும் ஒரு சேரச் சூழ இருந்து உண்பர். அவர்களை உண்பிக்கும் பொருட்டு மணவிருந்துப் பாடலை மூன்று அல்லது ஐந்து மகளிர் பாடிக் கொண்டிருப்பர். முன்கூட்டி விரைந்து உண்டெழுபவரை மற்றவர் மேலும் உண்ணுமாறு பிடித்து அமுக்கி வற்புறுத்துவர். பல வேடிக்கைகளைச் செய்வர். விருந்துப்பாடல் :-

கரி கப்பு திந்து காடெல்லா வாலாடி
கரியெம்மெ கரத நுரெயாலு
முத்தின பரணி சுருளந்தாலே
ஓள கும்ப ராயணிகெ எல நாகலே
ஒக்கலக்கி பேயாக சிக்கதொந்து குடான
இக்கிக்கி புவ்வ சமியில்ல
இக்கு புவ்வ சமியில்ல
உரிகே உட்லபெல்ல பாரசிக பஞ்ச செலவா
ஓளகும்ப ராயணிகெ எல நாகலே

"கருங்கருப்பைத்தின்று காடெல்லாம் அசைந்தாடி வந்த காரெருமை கறந்த நுரைமிக்க பாலால் உணவு ஆக்கப்பட்டுள்ளது. ஒன்று கூடி உண்போம் வருக. உறவினர்க்காக என்று தனியாகச் சமைத்த சிறுபானைச் சோறு உண்ண உண்ணக் குறையவில்லை. இனிப்பும் நறுமணமும் மிக்க திருமண விருந்தை முத்தும் மணியும் பதித்த கடகமணிந்த மகளிர் இலைகளில் படைத்துள்ளனர்"

"ஒன்று கூடி உண்போம். வருக நாகலே" என்னும் சொல் நாவலோ என்று விளிக்கும் பழங்காலத் தமிழ்ச் சொல் திரிபு எனத் தோன்றுகிறது.

அகனூநாற்றில் உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை திருமணச் சிறப்புணவு வகையாகக் கூறப்படுகிறது. இவர்கள் பருப்பு வகைகளிலும் சோற்றிலும் இனிப்பைச் சேர்க்கின்றனர். உழுந்து வடைகளைப் பந்தலின் மேற்கட்டுத் துணியில் இடுகின்றனர். மணமக்களுக்கு அன்று நாள்முழுதும் இனிப்பு உணவே உண்ணத் தருகின்றனர். காரம் புளி கலந்த எவ்வகைக் குழம்பும் சாறும் தருவதில்லை. அன்று மணமக்கள், உறவினர் அனைவர் வீட்டுக்கும் சென்று இனிப்பு உண்டு வரவேண்டும்.

மணநாளன்று மாலையில் துணித் தொட்டிலில் குழந்தை போல் ஒரு பொம்மை அல்லது குழவிக்கல்லைக் கிடத்தி மணமக்கள் முன்னிலையில் தாலாட்டுவர். இத்தாலாட்டுப்பாடல் மிக வேடிக்கையாக இருக்கும்.

மணமகள் வயிறு வாய்ப்பதிலிருந்து (கருப்பம்) முதல் திங்கள் நிறைந்ததற்கு அடையாளமாக அவள் கழுத்தில் முதல் சுற்று நூலிடுதலும், இவ்வாறே ஒவ்வொரு திங்கள் நிறைவுக்கும் ஒரு சுற்று நூலாக ஒன்பதாம் திங்கள் நிறைவில் ஒன்பது சுற்று நூலணிவித்தல் வரை அப்பாடலில் கூறப்படும். இவ்வாறு கழுத்தில் நூலணிதலை இன்றும் கருக்கொண்ட மகளிர் கடைப்பிடித்து வருகின்றனர். ஆண்மகவு பெறுதல், அக்குழந்தையைத் தாய் சீராட்டிப் பாராட்டி வளர்த்தல், அக்குழந்தைக்கு 'அத்தி மரத்தில் ஏருதே அத்தையின் குழத்தைகளை அடிக்காதே; தென்னை மரத்தில் ஏருதே; தங்கைமாரை வையாதே; மாமரத்தில் ஏருதே மாமாவின் பிள்ளைகளை அடிக்காதே' என்று அறிவுரை கூறுவது ஆகியவை சுவைமிக்கனவாகும்.

தமர்தரும் தலைநாளிரவு :

மணமக்களின் தலைநாள் கூட்டத்தை அகநானூறு,

கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி, யாகென தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல் (அகம், 86).
தமர் நமக்கீத்தத் தலைநாளிரவின்
உவர்நீங்கு கற்பினெம் உயிருடம்படுவி (அகம், 136)

உறவினர் பெருத்த ஆரவாரத்தோடு பல நகையாட்டங்களுக்கிடையே மணக்களை முதல்நாளிரவு ஓரிற் கூட்டியதாகக்கூறுகிறது. பழங்குடி மக்களும் ஓரிற் கூட்ட நகையாடல்களைப் பாடல்களாகப் பாடி மகிழ்வுறுத்துகின்றனர். அறையின் உட்புறம் பெண்ணை இருத்திப் பெண் வீட்டுப்பெண்கள் கதவைச்சார்த்திக்கொள்கின்றனர். வாயிலில் நிற்கும் மாப்பிள்ளையைச் சுற்றி மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் நின்றுகொண்டு கதவைத் திறக்கும்படி பாடுகின்றனர். 'உள்ளேயிருந்த நாங்கள் கதவைத்திறவோம்' என்று பெண் வீட்டுப் பெண்கள் எதிர்ப்பாடல் பாடுகின்றனர்.

ஆனெ கொட்டேனே ஆமைறிகொட்டேனே
ஆனெகெ ஜீனி பிகுசி கொட்டே
ஆனெகெ ஜீனி பிகுசி கொட்டே அக்கையா
தடுத பாகிலு பிடுநமிகெ
ஆனெ நமுதாதெ ஆனெமறி நமுதாதெ
ஆனெகெ ஜீனி மிகுலாதெ
ஆனெகெ ஜீனி மிகுலாதெ அக்கையா
தடுத பாகிலு பிடுதில்ல

பாடற்பொருள் :

"மணமகளுக்கு வரிசைப்பொருளாக யானைகளைக்கொடுத்தோம். யானைக் கன்றுகளையும் கொடுத்தோம். யானை அம்பாரிகளையும் அணி செய்து கொடுத்தோம். ஆதலால் தடுத்திருக்கும் கதவைத் திறவுங் கள்.

யானைகள் எங்களிடம் ஏற்கெனவே நிறைய உள்ளன. யானைக் கன்றுகளும் உள்ளன. எங்களிடம் ஒப்பனை செய்த அம்பாரிகளுக் கும் குறைவில்லை. எனவே, தடுத்திருக்கும் கதவைத் திறக்க மாட்டோம்."

இத்தகைய பாடல்கள் நூற்றுக்கணக்காக இரண்டு அல்லது மூன்று மணிநேரம் பாடுகின்றனர். பாடிய பெண்களுக்கு மணமகன் பரிசளிக்கிறான். கதவு திறக்கப்பட்டதும் அனைவரும் ஆரவாரம் செய்கின்றனர்.

அனைத்து நிகழ்ச்சிகளும் பாடல்களாகவே இருக்கும். இம்மக்க ளின் திருமணம் காண்போருக்குக் களிப்பூட்டுவதாகும்.

தென்னாட்டுப் பழங்குடி மக்களாகிய குறும்பர் மைசூர் மாநிலத் தில் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களில் பெரும் புலவர்களும் அரசர்களும் இருந்தனர் என்பது கன்னட நாட்டு வரலாற்றால் நன்கு தெரிகிறது. கால்நடைகளை மேய்த்து வாழும் ஒருசார் தெலுங்குப் பழங்குடி மக்களிடமும் இதே வகையான திருமண முறை உள்ளது.

தமிழர்கள் தாய்வழிக் குடியினராகவும், திரவிடமொழிகள் பிரி யாத ஒன்று பட்ட காலத்திய பண்பாட்டினராகவும் இருந்தகாலத்தில் இந்தத் திருமண முறை நன்கு வேரூன்றியதாகத் தெரிகிறது. இம் மக்கள் மூன்று நாளும் பாடும் பாடல்களையும், பிற விழாப்பாடல்களை யும் தொகுத்தால் குறைந்தது ஆயிரம் பாடல்களாவது தேறும்.

ஓதக்கி, உரலக்கி, மண்ணீராட்டு நாவலோ, தலைமகன், தலை மகள் போன்ற சொல்லாட்சிகளும் வெதிர்நெல்லிடித்துத் திருமண விருந்துக்கு அரிசியாக்குதல், பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டாரின் வரிசையாக யானையின் மீதேற்றிய பொற்கட்டிகளும், யானைகளும், தந்தங்களும் ஆனிரைகளும், சந்தனமும், மலர்ப்பிணையல்களும் உடை, அணிகல வகைகளும் நறுமணப் பொருள்களும் அளித்தல் ஆகியவை செல்வச் செழிப்பும் நாகரிகச் செம்மையும் மிக்க குறிஞ்சி

நிலத் தமிழ்க் குடியினராக பழங்காலத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதைக் காட்டுகின்றன

பழந்தமிழ்க்குடிகளான இப்பழங்குடிகளுக்குக் குறும்பர்என்றும் எக்கடெ, எக்கடி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. குறும்பர் என்பது குறிஞ்சி நிலத்தலைவரைக்குறிக்கும். இவர்கள் மூவேந்தரிடத்தும், பிற சிற்றரசரிடத்தும் அரண்மனை மேலதிகாரிகளாக இருந்தபொழுது 'அரண்மனைப் பெருங்கடை' என்னும் பட்டப் பெயரைத் தாங்கியிருந்தனர். பெருங்கடை என்னும் அதிகாரிகள் அரண்மனை மேலாண்மைப் பொறுப்பேற்றிருந்தவராவர். இப்பெருங் கடை எனும் சொல் பெக்கடை—பெக்கடெ—எக்கடெ—எக்கிடி எனத் திரிந்து விட்டது.

அரண்மனை மேலதிகாரிகளாகவும் கோட்டைத் தலைவர்களாக வும் ஒரு காலத்தில் விளங்கிய இப்பெருங்கடைகள் இப்பொழுது மலைக்காடுகளில் ஆடு மேய்த்து வாழும் கன்னடப் பழங்குடிகளாக மாறி மலைவாழ் பழங்குடிகள் (Scheduled Tribes) பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்ற ஆண்டு நேரிற் சென்று இப்பாடல்களை நாடாப்பதிவு செய்து வந்தேன். இம்மாவட்டத்தில் வாழும் தெலுங்கு மக்களிடம் கரிவண்டராயன் கதை என்னும் பெயரில் பழையனூர் நீலிக்கதையும், கன்னட மக்களிடம் மழைராயன் கதை என்னும் பெயரில் சிலப்பதிகாரக் கதையும் நாட்டுப் பாடல்களாகப் பாடப்பட்டு வீருகின்றன. நாட்டுப் புறப்பாடல்களில் உள்ள பழைமை நமக்குப் பல புதுமைகளைத் தெரிவிக்கின்றன. ○

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ் :	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

தனிம வரிசை

இல. க. இரத்தினவேல், அறி. மு.
அறிஞர் அண்ணு அரசினர் கல்லூரி, செய்யாறு-604407.

7. இதரம் MERCURY Hg^{201}_{80}

வெள்ளியை விடப் பளபளப்பு மிக்க பொருள் ஒரு கிண்ணத்தில் இருந்தது. அப்பொருளைத் தெளிவாய் உற்று நோக்கக் கருதி கிண்ணத்தைக் கவிழ்த்தவுடன் அஃது வெள்ளிக் கட்டியாக நிற்காமல் தண்ணீரைப் போல்—ஏன் நீரை விட மிக விரைவாய் விரைந்து பரவி ஓடியது. வெள்ளியை விட நிறைமிக்க இம்மாழை (metal) நீர்போல் விரைந்து-பரவியதால் இதனை 'விரைவு வெள்ளி' (quicksilver) என்றும் நீர்வெள்ளி (Hydra Argyrum) என்றும் அழைத்தனர். இதில் இருந்து வந்ததே Hg என்ற இதன் குறியீடு. இதுதான் எது? இயல் வெப்ப நிலையில் நீர்வடிவில் இருக்கும் ஒரே தனிம மாழையான பாதரசம்தான் அது. பாதரசத்துக்கான பழந்தமிழ் வழக்குச் சொல் இதள், இதரம் என்பன.

குலிகம் எனப்படும் சாதிலிங்கத்தில் (Cinnabar) இருந்து தான் அன்று முதல் இன்று வரை இதரம் எடுக்கப்படுகிறது. குலிகத்தின் நிறம் சிவப்பு. சிவப்பு நிறப்பொருளை தம் முழுமுதற் கடவுளான சிவனின் வடிவாகக் காண்பது பழந்தமிழரின் வழக்கம். எனவே சாதிலிங்கம் அதன் செந்நிறத்தால் சிவனுடன் தொடர் புறுத்தப்பட்டது, சாதிலிங்கத்தின் வித்து—அல்லது சாதிலிங்கத்தில் இருந்து வடிக்கப்பட்ட நீரம்—அரன் விந்து எனப்பட்டது. பாதரசத்தைக் குறிக்க இடைக்கால மருத்துவ இயைபியற் சித்தர்கள் பயன்படுத்திய குழூஉச் சொல் அரன் விந்து என்பது.

இந்தியரும், சீனரும், எகுபதியரும் இதரத்தைப் பழங்காலத்திலேயே தெளிவாய் அறிந்திருந்தனர். கி. மு. 1500—1600 வாக்கில் விளங்கிய எகுபதியக், கல்லறைகளில் இதரம் காணப்பட்டது. இதரத்தைத்தோலின் வழியாய்ப் பிழிந்து தூய்மையாக்கும் முறையை பிளினி தெளிவாக்குகிறுர்.

கி. பி. 281—361 இல் வாழ்ந்த கோ குங் (Ko Hung) என்ற சீன இயைபியலார் எழுதுகிறுர். குலிகத்தில் இருந்துதான் இதரம்

வெளிவருகிறது என்பதைக் கூடப் பலரும் அறிந்திருக்கவில்லை. சொன்னாலும் நம்ப மறுக்கிறார்கள்- 'குலிகம் செந்நிறப் பொருள். செந்நிறப்பொருள் எவ்வாறு வெண்ணிறப் பொருளை உண்டாக்கும்? என்கின்றனர். மேலும் 'அனலிற்பட்ட எந்தக் கல்லும்—குலிகம் உட்பட சாம்பலாய்த் தான் மாறும் அதற்கு மாறாக அதில் இருந்து எதையாவது எதிர்பார்க்க இயலுமா என்ன?' என்றும் கூறுகிறார்கள்.

இதரத்தின் இருப்பு நிலத்தரையில் கிடைக்கும் ஈயத்தின் அளவில் நூறில் ஒரு பங்கே இதரம் கிடைக்கிறது. இயற்கையில் குலிகத்தைக் காற்றிலோ அன்றிச் சுண்ணத்திலோ வறுத்து இதரத்தைப் பெறலாம்.

பயன் : பரப்பை நனைக்காமை, மிகுந்த வெப்பவிரிவும் (expansivity), குறைந்த வெப்பக் கொண்மை (heat capacity), பளபளப்பு முதலான இதரத்தின் பண்புகள். இதர வெப்பநிலைமானி களில் பயனுறுத்தப் பெற்றுள்ளன.

இதரத்தின் அடர்த்தி கன சீரடிக்கு (கன மீட்டருக்கு) 13560 சீரெடை (கிலோ கிராம்). நீரைப்போல் 13 மடங்கும், இரும்பைப்போல் இரு மடங்கும் அடர்த்தி மிக்கது. இரும்பு, வெள்ளி முதலியன இதரத்தில் மிதக்கும் வளியழுத்த மானி (barometer), அரத்த அழுத்த மானி (spygmomanometer) போன்ற எல்லா அழுத்த மானிகளும் கையடக்கமான அளவில் அமைவது, இதரத்தின் மிகுந்த அடர்த்தியால் தான்,

இதரக் கூடிகைகள் (mercurial compounds) பாலுறவு நோய் களில் நச்சுயிர்க்கொல்லிகளாக்ப் பயன்பெற்றன. பூச்சிக்கொல்லிகளா கவும் பயன்படுகின்றன.

சிறுகக் கையாளும் இதரமும் நாளாக நாளாகத் தொல்லையை விளைவிக்கும். பூச்சி கொல்லும் இதரக் கூடிகையில் இட்டெடுத்த அமெரிக்க விதைக் கோதுமையை அறிந்தும் துணிந்து உணவாகப் பயன்படுத்திய ஈராக் நாட்டு வேளாளப் பெருமக்கள் நாளடைவில் கொடும் வலிப்பு நோய்களுக்கு ஆளாகி நாடே துன்பப்பட்ட நிலையை நாம் அறிவோம் இல்லையா? இதர ஆவி நஞ்சும் நாளாக

தொடர் : 4

மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்.

புலவர். இறைக்குருவனார்.

16

இயலிசை நாடக மென்றிசை மன்னி
இலக்கு பசுந்தமிழின்
எழினல மயலார் பழிபடு வினையான்
இழந்தமை பட்டொழிய
அயலின மொழியினு முயர்வுறு தமிழின்
ஆற்றன் மிகப்போற்றி
அருந்தமிழ் [1]நாடகம் ஆக்கிய மெய்ப்பொருள்
அறிஞன் [2]சுந்தரனின்
உயரிய வாழ்த்தும் பாராட் டுரையும்
உலவாப் பேரன்பும்
ஓங்குறு நட்பும் பெற்றேய் தமிழை
உற்ற வழித்தீய்க்கும்
அயலவர் விரகுகள் வீழ்த்திய பெரியோய்
ஆடுக செங்கீரை !
அம்பல வாணன் அடிமலர் [3]பரவி
ஆடுக செங்கீரை !

1 நாடகம்—மனோன்மணீயம்; 2. சுந்தரன்—ஆலப்புழை திருவுயர் பெ. சுந்தரனார்; 3. பரவி—வழுத்துவோன்: பெயர்ச்சொல்

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளாகக் கெடுதல் ஊட்டும். உயர்வழுத்த இதர ஆவி விளக்குகள் நிறைந்த ஒளியை உமிழ்ந்து இரவைப் பகலாக்குகின்றன.

விண்கோள் தொடர்பு: புதன் எனப்படும் அறிவன் கோளுக்கு mercury என்று பெயர். இந்தப் பொன்ம நீரம் (metallic liquid) இவ்வானக் கோளின் பெயரால் mercurius எனக் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் வழங்கப்பெற்று வந்து பின் mercury எனவே அழைக்கப்பெறலாயிற்று. அறிவனுக்கான குறியீடே இதரத்துக்கும் அக்காலத்தில் அளிக்கப்பட்டது.

தொன்மை மிக்க ஏழுமாழைகளையும் அஃதாவது பொன்மங்களை (metals) யும் பற்றி இதுவரை அறிந்தோம். இனிப் பழங்காலத்திலேயே அறியப்பெற்ற இரு அண்மங்களை (non metals)க் காணலாம்.

17

[1]முத்திறத் தவரும் ஒத்து மகிழ்ந்திட
முன்னைச் சிவநெறியின்
[2]முடிவுறு முடிபே மீமுடி பென்று
முழங்கிப் [3]பெயர்கொண்டோன்
மெத்தவு [4]மறைமுடி கொள்கை பரப்புவி
வேகா னந்தற்கு
மேன்மைச் சிவனிய தனிமுடி பருளிய
மேதைப் பெருமகனும்
எத்திசை யும்புகழ் வித்திய [5]சோம
சுந்தரன் மாணவனாய்
[6]எழில்வர லாறுங் காஞ்சியும் ஆக்கமும்
இயற்றிநன் மெய்யறிவின்
அத்த னெனக்கொடு போற்றினை நன்றே
ஆடுக செங்கீரை!
அம்பல வாணன் அடிமலர் பரவி
ஆடுக செங்கீரை!

---

1. முத்திறத்தார் - நட்டார், ஒட்டார், அயலவர்; 2. முடிவுறு முடிபு - சித்தாந்தப்; 3. பெயர்-'சூறாவளி' (சண்டமாருதம்) என்னும் பட்டம்; 4. மறை முடிபு - வேதாந்தம்; 5. சோமசுந்தரன்-அடிகளாரின் மெய்ந்நூலாசிரியரான திருப்பெருந்திரு சோமசுந்தரனார்; 6. சோமசுந்தர நாயகர் வரலாறு, சோமசுந்தரக்காஞ்சி, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் என்பன அடிகளார் இயற்றிய நூல்கள்.

மன்னன் சேதுபதியின் பேரவையில் சிவனியக் கொண்முடிபு நாட்டியமைமையையும், விவேகானந்தர்க்கு அஃது அறிவுறுத்தமையையும் வரலாற்றில் காண்க:

18

நல்லார் பரவும் [1]சிவனிய நெறியும்
நலமிகு செந்தமிழும்
நாளும் அயலவர் தலையெடுப் பதனுன்
நலிவுறு நிலைமையுணர்ந்(து)
ஒல்லும் வகையான் உறுமணி செய்யும்
உறுதியின் [2]புகலியர்கோன்
உயர்பெயர் தாங்கிய [3]தலைமகன் தரலும்
உவகை யொடும்பெற்றுக்

[4]கல்லா டையைமேற் கொண்டு [5]தமிழ்முறை
காட்டிய மெய்த்துறவின்
கண்ணிய முயரத் திண்ணிய வண்ணங்
கனிவொடு செய்பணியால்
அல்லல் அறுத்தெமை ஆண்டுகொள் பெரும
ஆடுக செங்கீரை!
அம்பல வாணன் அடிமலர் பரவி
ஆடுக செங்கீரை!

19

விருந்தியல் நாடகம் ஆக்கி வழங்கி
விளங்கு புகழ்கொண்டோன்
விரிதமிழ் போற்றும் [1]சுந்தரன் இனிதே
விரும்பு கணக்காயன்
[2]செருந்துசூழ் நாகை [3]நாரா யணனுஞ்
சீரிய பெரியோனால்
செந்தமிழ் அமுதம் ஊட்டப் பெற்றவ
திப்பிய மெய்ப்புலவ
திருந்திய பத்துப் பாட்டுறு [4]பாலைத்
தெள்ளிய ஆய்வுரை நூல்
திருவுயர் அன்னோன் நினைவாய்ப் படையல்
செய்துளம் நனியுருகும்
அருந்தவ வாழ்வின் பெருந்தகை யாள
ஆடுக செங்கீரை!
அம்பல வாணன் அடிமலர் பரவி
ஆடுக செங்கீரை!

18—1. சிவனியம் - சிவநெறி (சைவமதம்); **2.** புகலியர் கோன்- ஆளுடைப்பிள்ளையார் (ஞானசம்பந்தர்); **3.** தலைமகன் - அடிகளாரின் மூத்த மகனார் திருஞானசம்பந்தம் என்னும் பெயரினர்; அவர் கையாற் றரப்பெற்றே துவராடை பூண்டு அடிகளார் துறவிக் கோலம் பூண்டார்; **4.** கல்லாடை - துவராடை (காவியாடை) **5.** தமிழ்முறை - இயற்கைக்கு மாறான தனித்துறவு கொள்ளாமை.

19—1. சுந்தரன் - மனோன்மணீய ஆசிரியர் சுந்தரனார்; **2.** செருந்து- செருந்திக் கொடி; **3.** நாகை நாராயணசாமி என்பர் அடிகளாரின் இயற்றமிழ் ஆசிரியர்: மனோன்மணீயம் சுந்தரனார் இவ்வாசிரியரிடத் திலேயே யாப்பிலக்கணம் பயின்றனர்; **4.** பட்டினப்பாலை ஆராய்ச்சி யுரை என்னும் நூலைத் தம்மாசிரியர் நினைவாக வெளியிட்டனர் அடிகளார்.

20

பிறமொழி கலவா(து) உயரிய தமிழைப்
பேணி வளர்ப்பதுவே
பேசு பெருப்பணி என்றருண் மொழியைப்
பெட்புற மேற்கொண்டு
திறமிகு கட்டுரை நூல்பல யாத்துத்
தெள்ளிய பணியாற்றித்
திருவரங் கற்குப் பெருமனை யாளும்
திருவுற் றிகல்வெல்லும்
மறமி(கு) [1]இராம சாமித் தலைவனை
மாபெரி யாரென்றே
மன்பதை போற்றப் பட்ட மளித்து
மாண்புறு [2]மகள் தாதை
அறவோர் போற்றும் இறவாப் புகழோய்
ஆடுக செங்கீரை!
அம்பல வாணன் அடிமலர் பரவி
ஆடுக செங்கீரை!

---

1. இராமசாமி - ஈரோடை இராமசாமிப் பெரியார்; 2. மகள்- அடிகளாரின் மகளான திருவாட்டி நீலாம்பிகையம்மையார்; ஈ. வே. இரா. அவர்களுக்கு அம்மையார் தலைமையில் நிகழ்ந்த மாநாட்டில் 'பெரியார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

உலகத் தமிழ்க் கழக

4-ஆவது

பொது மாநாடு.

சென்னை.

உலகத் தமிழ்க் கழகத்தின் 4-ஆவது பொது மாநாடு, தி. பி. 2008 சன்னி (1977–செப்டம்பர், அக்டோபர்) த் திங்களில் சென்னை மாநகரில் நடத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது. எனவே, ஆங்காங்குள்ள மாவட்டப் பொறுப்பாளர்களும், தூய தமிழ்த் தொண்டுள்ளம் வாய்த்த கழகப்பற்றுளர்களும், உடனடியாகப் பொதுச் செயலாளருடன் தொடர்புகொண்டு, தம்தம் வினைப்பாட்டு நிலைகளைத் தெரிவிப்பதுடன், மேற்கொண்டு மாநாடு சிறப்புற நடக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தி. பி. 2008, விடை 24 (6—6—1977.)

இறைக்குருவன்.
பொதுச் செயலாளர், உலகத் தமிழ் கழகம்
2, மேற்கு அரசர் தெரு, (West Raja St,) சென்னை-16.

செய்திகள்

திருச்சி மாவட்டம்.

1. வேணுகோபால் - உமாராணி திருமணம். திருச்சி.

கடந்த (29—6—77) ஆடவை 15-ஆம் பக்கல் அறிவன் காலை 9 மணிக்கு, செல்வன் இ. வேணுகோபால் (இணைப்புப்பெட்டித் தொழிற்சாலை, சென்னை.) அவர்களுக்கும், புதுக்கோட்டை, சித.பால சுப்பிரமணியன் அவர்கள் மகள் செல்வி. உமாராணிக்கும், திருச்சிராப்பள்ளி, பட்டர்ஒர்த்து சாலையில் உள்ள, சத்திரத்தில், தென்மொழி ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் திருமண விழா சிறப்புற நடைபெற்றது. வெங்காலூர் திரு. முத்துச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்த, மணமக்களை வாழ்த்தி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் (மதுரை) செ. கோவிந்தராசன், திருச்சி, சமால் முகமது கல்லூரிப் பேராசிரியர் திரு. மீ. அ. மு. நாசீர் அலி, க. மு: திருச்சி எம். எசு. இராமமூர்த்தி. க. இ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் மணமக்களை வாழ்த்தியும் தமிழர் திருமண முறையினை விளக்கியும் பாவலரேறு அவகள் அரியதொரு கருத்துரை வழங்கினர். மணமக்கள் உறவினர் இனிமேல் தங்கள் சார்பில் நடைபெறவிருக்கும் அனைத்துத் திருமணங்களையும் பாவலரேறு அவர்களைக் கொண்டே நடத்துவிப்பதென மகிழ்ந்து கூறினர். இறுதியில் சென்னை, தொலைபேசி ஆய்வாளர் திரு. கா. நாராயணமூர்த்தி, அறி. இ. அவர்கள் நன்றி கூற திருமண விழா இனிய அறுசுவை விருந்துடன் முடிவுற்றது.

2. திருச்சி, கொதிகலன் தொழிற்சாலை ஊரக அன்பர்கள் வரவேற்பு:

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் நெருக்கடி நிலையின் பொழுது, உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஓராண்டுச்சிறை சென்று மீண்டபின், திருச்சிக்கு வந்தது இதுவேமுதல்முறையாதலின் திருச்சி, கொதிகலன் தொழிற்சாலையில் (B.H.E.L.) பணியாற்றும் ஊரக அன்பர்கள், அவர்க்குக் கடந்த ஆடவை 15 (29-6-77) அன்று இரவு 8 மணியளவில் ஒரு வரவேற்பு நடத்தினர், வரவேற்பு திருச்சி ஊரக அன்பரும், நெடுநாளையத் தென்மொழித் தொண்டருமாகிய திரு. நாரா. மகிழ்நன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. திருச்சி ஊரக அன்பர்களில், தென்மொழி முகவர். குழந்தை. ஈகவரசன், திருவாளர்கள், எழிலரசன், பிச்சுமணி, கா. பு, பரசுராமன் குடும்பம் சு. மகிழ்வரசு முதலிய இருபதின்மருக்கு மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டனர். அன்பர்கள் அன்று இரவு இரண்டு மணிவரை பாவலரேறு அவர்களுடன் அண்மையில் ஏற்பட்ட அரசியல்மாற்றங்கள் குறித்துப் பலவாறு கருத்துரையாடல் நிகழ்த்தினர், தொடக்கத்தில் பாவலரேறு அவர்களுக்குக் கைத்தறியாடை போர்த்து, ஊரக அன்பர்கள் சார்பில் நூற்றுரோர் உருபா நன்கொடை தரப்பெற்றது.

ஊரக அன்பர்களின் அன்பையும் ஆர்வத்தையும் கண்டு மகிழ்ந்து ஆசிரியர் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

தென்னார்க்காடு மாவட்டம்

3. பாவாணர் தமிழ்க்குடும்பம் (நெய்வேலி) தந்த வரவேற்பு ;

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குத் கடந்த ஆடவை 17-ஆம் பக்கல் (1-7-77) அன்று நெய்வேலி, பாவாணர் தமிழ்க் குடும்பச் சார்பில் ஒரு வரவேற்பு தரப்பெற்றது. அந்நிகழ்ச்சியில் நெய்வேலிச் சுரங்கப் பகுதியில் பணியாற்றும் அதிகாரிகள் சிலரும் பொறியாளர் சிலரும், பாவாணர் தமிழ்க்குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு பாவலர் தொண்டைப் பாராட்டிப் பேசினர். பாவாணர் தமிழ்க்குடும்பச் செயலர் திரு. அன்புவாணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுத் தமிழ்க்குடும்பத்தின் செயற்பாடுகளை விளக்கிப் பேசினர். இறுதியில் பாவலரேறு அவர்கள் தமிழ்க்குடும் பத்தின் பணிகளைப் பாராட்டிப் பேசியதுடன், குடும்ப உறுப்பினர்கள் அனைவர்க்கும் தம் நன்றியைத் தெரிவித்துக் குடும்ப அமைப்பை மேலும் விரிவுபடுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இறுதியில் அனைவர்க்கும் சிற்றுண்டியும் குளம்பியும் வழங்கப்பெற்றன

தஞ்சை மாவட்டம்

4. காசிநாதன் – கண்ணகி திருமண விழா – உறந்தை ராயன்குடிக்காடு.

நிகழும் தி. பி. 2008, ஆடவை 19 (3-7-77) -ஆம் பக்கல் ஞாயிறு காலை 9 மணியளவில், தஞ்சை உறந்தைராயன்குடிக்காட்டின் அருகில் உள்ள தெலுங்கன்குடிக்காட்டில், திரு. இல. மாணிக்கம் அவர்களின் மகன், செல்வன். காசிநாதனுக்கும், திரு. தெ. சின்னப்பன் அவர் களின் மகள், செல்வி. கண்ணகிக்கும் தென்மொழி யாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையிலும், புலவர்; திரு. அ. நக்கீரனார் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்திருமணம் நடைபெற்றது. புலவர் திரு. நக்கீரனார், குடந்தைப்புலவர். திரு. கதிர் தமிழ்வாணனார் அவர்களின் வாழ்த்துரைக்குப்பின் பாவலரேறு அவர்கள் மணமக்களை வாழ்த்தியும், தமிழர் வாழ்வியல் வரலாற்றை விளக்கியும், அரியதொரு சொற்பொழிவாற்றினர். மணமக்கள் இரு வர்க்கும் உரியரான, திரு. பா. இறையெழிலன், அவர்கள் நன்றி கூற, இனிய விருந்துடன் மணவிழா சிறப்புற முடிவுற்றது. விழாவில் ஆசிரியருடன், நெய்வேலி, தென்மொழித் திருமாறன், வடவஞ்சார் தென்மொழி ப. முருகவேள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டம்

5. தமிழின வரலாற்றுக் காப்புக்கூட்டம்–கோவை

கடந்த 23-7-77 மாலை 6-30 மணியளவில் கோவை, தெப்பக் குளம் திடலில் 'தமிழின வரலாற்றுக் காப்புப் பொதுக்கூட்டம்' புலவர் திரு. சா. மருதவாணனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

நிகழ்ச்சியைக் கோவை வரலாற்றுக் காப்பு முன்னணியினர் அமைத்திருந்தனர். தொடக்கத்தில் நீலமலை இளமாறன் தென்மொழிப் பாடல்கள் சிலவற்றைப்பாடியபின், புலவர் திரு. ந. இரா. தமிழவேள் அவர்கள் வரவேற்புரையாற்றினர், முதற்கண் தலைவர் ச. மருத வாணனுர் தம் முன்னுரையில் அரசுப் பாடநூலில் தமிழ்ப்பகைவர் நிகழ்த்திய குறும்புகளைக்கண்டித்துப் பேசினுர். அடுத்து, சேரர்கொற்ற அமைப்பாளர் திரு. தென்மொழி, மறை-நித்தலின்பனுர், சித்தோடு புலவர் திரு. குமர, நடவரச. ஈவப்பனுர் விளம்பரப்பலகைத் தமிழ்ப் படுத்தம் பற்றியும், தமிழ்ப்பகைவரின் மறைமுகக் கெடும்புகள் பற்றியும் உரையாற்றினர். அடுத்து திரு. அ. இறையனுர் அவர்கள் 'தெருவிலே தமிழ் மானம்' என்பது பற்றி அரியதொரு கருத்துரையாற்றினுர். அதன்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் 'உலகம் சுற்றிய தமிழன்' என்னுத் தலைப்பில் தமிழர்களின் தொல் வரலாற்றுப் பெருமையையும் அதன் வீழ்ச்சியும், இக்கால் செய்ய வேண்டிய பல்துறை முயற்சிகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்துச் சிறப்புரையாற்றினுர். திரு. விடுதலை விரும்பி அவர்கள் 'பாடநூல் நெருக்கடி' பற்றி இறுதியுரையாற்றிய பின் பொதுக்கூட்டம் சிறப்புற இரவு 11-30 மணியளவில் முடிவுற்றது. இடையிடையே சிறு சிறு தூறல் இருந்தும், பொதுமக்கள் சிதர்வுறுமல் அமைவாக இறுதிவரை இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டம் அவ்வட்டாரத்தில் நல்ல தமிழ் எழுச்சியை ஊட்டியதாக அனைவரும் பாராட்டிப் பேசினர்

6. தமிழ் இலக்கியப் பேரவை - பட்டி மன்றம்-திருப்பூர்

சென்ற 24-7-77 ஞாயிறு அன்று மாலை, திருப்பூர் தமிழ்இலக்கியப் பேரவைப் சார்பில், அதன் 9-ஆம் ஆண்டு நிறைவு விழாவாகப் 'பிறமொழிக் கலப்பால் தமிழ் வலிவுறுமா? நலிவுறுமா?' என்னுந் தலைப்பில் சிறப்பான ஒரு பட்டிமன்றம் நடைபெற்றது. (பட்டி மன்ற நிகழ்ச்சிக்குமுன், புலவர் இரா, வடிவேலன், க மு அவர்கள் எழுதிய 'ஓர் அரும்பு மலர்கிறது' என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது) பட்டி மன்றத்திற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் நடுவராக இருந்தார், திரு. கல்யாணசுந்தரம் மொழி வாழ்த்துப்பாட, புலவர் திரு- இரா. வடிவேலன் க. மு; அவர்கள் வரவேற்புரை யாற்றினுர். ஆண்டறிக்கை திரு. து. க. தனபாலன் அவர்களால் படிக்கப் பெற்றது.பட்டி மன்றத்தலைவராகத் தென்மொழி மறை-நித்தலின்பனுர் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். பட்டி மன்றம் இரவு 8-30 அளவில் தொடங்கியது. பட்டி மன்றத் தொடக்கவுரை திரு. இரா முருகேசன் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. பட்டி மன்றத்தில் 'பிறமொழிக்கலப்பால் தமிழ் வலிவுறும்' என்லும் கருத்தை வலியுறுத்திப் புலவர் திரு. புவியரசு, அணித்தலைமையேற்க, திருவாளர்கள் சுப்பராயன், புலவர் மே. அ கிருட்டிணன் ஆகியோர் தருக்கமிட்டனர். இவர்கள் அனைவரும் உண்மையிலேயே அக்கருத்தைத் தம் கொள்கையாகக் கொண்ட கோவை, வானம்பாடிக் குழுவினர் 'பிறமொழிக் கலப்பால் தமிழ் நலிவுறும்' என்னும் கருத்தை வலியுறுத்தி, திரு. அ இறையனுர் க. இ: க. பயி. அணித்தலைமையேற்க, திருவாளர்கள், தென்மொழி மூத்துக்குமரன், க, இ' க, பயி, புலவர் வீ, முத்துசாமி ஆகியோர் துணைநின்று வழக்காடினர். இம்மூவரும்

உண்மையிலேயே தனித்தமிழ்க் கொள்கையினர். பட்டி மன்றத் தருக்கங்கள் உணர்வோடு, கருத்துச் செறிவாகவும் விறுவிறுப்பா கவும் உண்மையாகவும் அமைந்திருந்தன. பட்டி மன்றம் நடைபெற்ற திருப்பூர் காவிரியம்மன் திருமண மண்டபம், கற்ற அறிஞர்களாலும். தமிழன்பர்களாலும், பொதுமக்களாலும் நிரம்பி வழிந்தது. அவ்வப் பொழுது அவையினர் கையொலி யெழுப்பி இருசாரார் கருத்துரை களையும் உணர்ச்சியோடு பெரிதும் வரவேற்றுச் சுவைத்தனர், பாவலரேறு அவர்கள் இடையிடைக் கொடுத்த கருத்து விளக்கங் கள் சொற்போரை மேலும் சுவையுடையதாகவும், வீறுடையதாகவும் ஆக்கின. இறுதியில் பட்டிமன்ற நடுவர் பெருஞ்சித்திரனார் அவர்கள் இருசார் கருத்துகளையும் எடுத்து விளக்கித் தீர்ப்பைக் கூறுவதற்கு முன் பாாவையாளராக வந்திருந்தோருள் திருமிகு, கு, வே, கிருட்டின சாமி, க. மு, [அர]: க மு [பொரு], க, மு, [வர] [முதல்வர், கல்வி யகம், கோவை] அவர்களின் கருத்துரைக்கும் இடமளித்தார், பார்வை யாளர்கள் சார்பில் திரு கு. வே, கி, அவர்கள் 'பிறமொழிக்கலப்பால் தமிழ் நலிவுறும்' என்று மிகவும் அழுத்தமாகக் கூறிமுடித்தார், அக்கருத்தையொட்டிப் பாவலரேறு அவர்கள் தமிழ்மொழியின் முன் னைய வரலாறு, இடைத்தொய்வு, இறுதிப்போராட்டம் ஆகிய நலன் களை உள்ளுணர்வோடும் அறிவுணர்வோடும் எடுத்து விளக்கி, இவ் வுரைகளைக் கேட்டு அவையினரே தீர்ப்பை உணர்ந்து கொள்ளுமாறு, வீறுபெற முழக்கினார், கடந்த பந்தாண்டுகளில், திருப்பூர் தமிழ் இலக்கியப் பேரவை இதுபோலும் ஒரு கூட்டத்தைக் கண்டதில்லை யென்றும், இப்பட்டி மன்ற நிகழ்ச்சியால் தனித்தமிழுணர்வு பெரிதும் வலிவுற்ற தென்றும் அனைவரும் வாயாரப் பாரட்டியுரைத்தனர். அனைத்துச் சிறப்புடனும், புலவர் திரு, சு, திருமூர்த்தி அவர்களின் நன்றியுரையுடனும் நிகழ்ச்சி இரவு 12-30 மணியளவில் இனிதே முடிவுற்றது

7. மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா.

தளவாய்ப்பட்டணம் :

சென்ற 25-7-77 ஆம் பக்கல் திங்கட்கிழமை மாலை 4 மணியள வில் தளவாய்ப்பட்டணம் அரசுயர் பள்ளி, மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா, தாயகம், சிவ, நடராசன், (நிலக்கிழார், தளவாய்ப்பட்டணம்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது, தலைமை யாசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் அனைவரும் ஒருங்கு திரண்டிருந்தனர், விழா ஏற்பாடுகளை அப்பள்ளி ஓவிய ஆசிரியர் தென்மொழி அறவாழி அமைத்திருந்தார், விழாவின் தொடக்கத்தில் சித்தோடு புலவர், குமர, நடவரச, ஈவப்பனார், தென்மொழி மறை-நித்தலின்பனார் ஆகியோர் உரையாற்றினர், இறுதியில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'பாவேந்தர்' என்னும் பொருள் பற்றி மாணவர்களுக்குச் சிறுசிறு கருத்துக் கதைகளுடனும், பாடல்களுட னும் அரியதோர் உரையாற்றினார், விழாவிற்கு அவவூர்ப்பொது மக்களும் வந்திருந்து சிறப்புச் செய்தனர்.

8. மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா-

தொண்டாமுத்தூர்.

கோவை, தொண்டாமுத்தூர், அரசுயர் பள்ளியில், கடந்த 26-7-77 ஆம் நாள் காலை 11-30 மணியளவில், மாணவர் இலக்கிய

மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. தென்மொழி மறை-நித்தலின்பனுர் தலைமையில், சித்தோடு புலவர், குமர. நடராச, ஈவப்பனுர் உரையாற்றியபின், பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் 'மாணவர்களும் இலக்கியமும்' எனுந் தலைப்பில் கருத்துரை ஒன்று ஆற்றினுர். இறுதியில் தென்மொழி. நீலமலை இளமாறன் தென்மொழிப் பாடல்கள் சிலவற்றைப் பாடி மாணவர்களை மகிழ்வித்தார். இறுதியில் பள்ளித் தலைமையாசிரியர் புலவர் திரு பூ. சு. அரங்கசாமி அவர்கள் நன்றியுரைத்தார்.

9. மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா – ஆலந்துரை.

கோவை, ஆலாந்துரை, அரசுயர் பள்ளியில், சென்ற 26-7-77 அன்று மாலை 3-30 மணியளவில், மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. விழா தொண்டாமுத்தூர் தலைமைத் தமிழாசிரியர் புலவர் திரு பூ. சு. அரங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரனுர் 'மாணவர்க்கு' என்னுந் தலைப்பில் சிறப்புரையாற்றினுர். ஆசிரியருடன் இணைந்து சுற்றுச்செலவை மேற்கொண்டிருந்த தென்மொழி மறை-நித்தலின்பனுர், புலவர் குமர நடவரச, ஈவப்பனுர் அவர்களும் உரையாற்றினர். இறுதியில் தென்மொழி-நீலமலை இளமாறன் அவர்கள் தென்மொழிப் பாடல்களைப் பாடினுர். முடிவில், பள்ளித்தமிழாசிரியர் புலவர் ந. இரா. தமிழவேள் அவர்கள் நன்றி கூறி விழா இனிது முடிவுற்றது.

10. இலக்கிய மன்றத் தொடக்க விழா - காசிபாளையம்:

கோபிவட்டம், காசிபாளையம் உயர்நிலைப்பள்ளியில். கடந்த 27-7-77 அன்று முற்பகல் 10மணியளவில், தமிழ்த்திரு கா. அ. செல்வம் அவர்கள் தலைமையில், மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா சிறப்புற நடைபெற்றது. அதில், பாவலரேறு பெருஞ்சித்திரனுர் இலக்கிய மன்றத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினுர். தொடக்கத்தில் பாவலரை வரவேற்றுப் பள்ளிக் கட்டடக்குழுச் செயலர் திரு கா. செ. தாண்டா அவர்கள் உரையாற்றினுர் திருவாளர்கள் குமர. நடவரச. ஈவப்பனுர், தென்மொழி. மறை நித்தலின்பனுர், ஆகியோரும் உரையாற்றினர். இறுதியில் தென்மொழி நீலமலை இளமாறன் அவர்கள் தமிழ்ச்சிட்டுப் பாடல் ஒன்றைப் பாடி மாணவர்களை மகிழ்வித்தார் தலைமையாசிரியர் நன்றியுரைக்குப் பின் விழா இனிது முடிவுற்றது.

11. திருவள்ளுவர் மன்றச் சிறப்புக்கூட்டம் – கூவலூர்

கோபி வட்டம், கூவலூரில், கழிந்த 27-7-77 அன்று பிற்பகல் 5 மணியளவில், தென்மொழி மறை. நித்தலின்பனுர் அவர்கள் தலைமையில், திருவள்ளுவர் மன்ற 'வரலாற்றுச் சிறப்பு நிகழ்ச்சி' நடைபெற்றது. திரு செம்பியன் அவர்கள் வரவேற்புரைக்குப் பின், தலைவர் முன்னுரையும், திரு குமர. நடவரச. ஈவப்பனுர் அவர்களின் கருத்துரையும் நிகழ்ந்தன. இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் 'தமிழும் தமிழரும்' என்பது பற்றிச் சிறப்புரையாற்றினுர். கூட்டத் தொடக்கத்தில் தென்மொழி நீலமலை இளமாறன்

அவர்கள் தென்மொழிப் பாடல்கள் சிலவற்றைப் பாடினர். இரவு 7–30 மணியளவில் கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தைத்தென்மொழிப் புலவர் பொன்- முகிலன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

12. தமிழ் வட்டம் -- பாவேந்தர் விழா -- கோபிச்செட்டிபாளையம்.

கடந்த 27-7-77 இரவு 9 மணியளவில், கோபி, தமிழ் வட்டம் சார்பில் பாவேந்தர் விழா இனிது நடைபெற்றது. விழாவிற்கு 'இராவண காவிய'த்தை வெளியிட்ட திருப்பூர் எசு. ஆர். சுப்பிர மணியனார், 'மலர்க மாநில சுயாட்சி' எனும் நூலாசிரியர் வழக்கறிஞர் கே. எசு. ஆனந்தம், ஆகியோர் உள்பட அறிஞர்கள் பலரும், பேராசிரியர்கள், புலவர்கள் தமிழன்பர்கள், மாணவர்கள் ஆகியோரும் திரளாக வந்திருந்தனர். விழாவிற்குப் பேராசிரியர் திரு கா. அரங்கசாமி க மு. அவர்கள் தலைமையேற்றார், புலவர் குமர. நடவரச சிவப்பனார், தென்மொழி மறை. நித்தலின்பனார் ஆகியோர் உரைக்குப்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'பாவேந்தர்' எனும் தலைப்பில், அவரின் தமிழ், தமிழினம், தமிழகம் பற்றிய மறுமலர்ச்சிக் கருத்துகளை உணர்வு பெற எடுத்துக்காட்டி, அரியதொரு சிறப்புரையாற்றினார். கூட்டத்தினர் மெய்ம்மறந்து இரவு 12-30 மணிவரை இவ்வரிய உணர்வுரையைச் செவி மாந்தனர் இறுதியில் புலவர் திரு எழில்வேலன் இல. இ. அவர்கள் நன்றிகூறினார். கூட்ட முடிவில் பாவலரேறு அவர்களின் பேருரையைக் கேட்டு வியந்த, அவ்வூர் வைரவிழா உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் முதுபுலவர் திரு கோபி. அரசு அவர்கள், பாவலர்க்குக் கீழ்வரும் பாமாலையை இசையுடன் உரக்கப் பாடி உவந்தளித்தார்.

பாவலரின் ஏறே! பெருஞ்சித் திரனாரே!
கவலராய்ச் செந்தமிழைக் காத்துவரும்—நாவலரே!
தென்மொழியின் ஆசானே! தேங்குபுகழ் ஓங்கிடச்செய்
பொன்மனத்துக் கெம்இனிய வாழ்த்து!

பாவேந்தர் பாவில், பழைமை தனைத்தாக்கும்
தீவேக மான திறமைகளை—நாவினிலே
அள்ளியள்ளி வீசி அருந்திறனைக் காட்டியிங்குத்
துள்ளியெழச் செய்தீர் துடித்து!

அவரை யொட்டிக் கூட்டத்திற்கு வந்திருந்த வழக்கறிஞர் கே. எசு. ஆனந்தம் வணி. இ; சட்ட இ. அவர்கள், தாம் எழுதிய 'மலர்க மாநில சுயாட்சி' எனும் 45 உருபா விலையுள்ள நூலைப் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு என் அன்புக் படையல் (காணிக்கை)' என்றெழுதிக் கையொப்பமிட்டு வாழ்த்திக்கொடுத்தது குறிப்பிடத்தக்கது, இவ்வகையில் விழா இனிது சிறப்புற்று விளங்கியது

13. இலக்கிய மன்றத் தொடக்க விழா–தேவத்தூர்.

பழனி வட்டம், தேவத்தூர், மணிமேகலை இளங்கோ உயர்நிலைப் பள்ளியில், கடந்த 28-7-77 பிற்பகல் 3·30 மணியளவில் மாணவர்

இலக்கிய மன்றத் தொடக்க விழா, அப்பள்ளித்தாளாளரும், முன்னுள் சட்டமன்ற உறுப்பினருமாகிய திரு நாச்சிமுத்து, அவர்களின் தலைமையில் இனிது நடைபெற்றது. அப்பள்ளி ஆசிரியர் திரு தென்மொழி இரணியன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர். தலைவர் உயர்திரு நாச்சிமுத்து அவர்கள் தம் உணர்வு சான்ற முன்னுரைக்குப்பின், திரு குமர- நடவரச-ஈவப்பனுர், தென்மொழி மறை நித்தலின்பனுர் ஆகியோர் மாணவர்க்கு நல்லுரையாற்றினர். திரு ஈவப்பனுர் தம் உரையில், பள்ளியில் உள்ள அறிவிப்புப் பலகைகளிலும் பிற வகுப்பறை விளக்கப் பலகைகளிலும் உள்ள ஆங்கில உரைகளைத் தவிர்த்தோ, அல்லது அவற்றுடனே, தூய தமிழில் விளக்கங்களை எழுதி வைக்குமாறு, தாளாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். அடுத்து, பேரா. காளிமுத்து, க. மு- அவர்கள் பேசுகையில், தாம் தென்மொழி மாணவர் என்றும், தாம் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் படிக்கும்பொழுது தென்மொழி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு ஈடுபட்டதாகவும், அக்கால் பாவலரேறு அவர்களைக் கல்லூரிக் கழைத்துச் சிறப்புச் செய்ததாகவும், அதுபொழுது அவர்களை வண்டியினின்று கீழே இறங்க விடாமல், விழாமேடைக்கு மாணவர் பலருடன், தோள்களின் மீதே அமரவைத்துச் சுமந்து சென்றதாகவும் கூறித் தென்மொழி, இனம், நாடு இவற்றின் முன்னேற்றத்திற்கெனவே தம் வாழ்நாளை ஒப்புவித்த தென்மொழிக் குடும்பத்திற்குத் தமிழினம் நன்றி செய்யக்கடமைப்பட்டுள்ள தென்றும் உள்ளம் நெழ்ச்சிபொங்கக் கூறினுர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் மாணவர்களுக்கேற்ற வகையில் தமிழ் வரலாற்றையும், தமிழ்மொழியின் சிறப்பியல்புகளையும் சுருங்கக் கூறினுர்கள். அவர்களின் உரைக்கிடையில் தாளாளர் அவர்களின் பொதுவுணர்வு பற்றியும் மாணவர்களின் முன்னேற்றத்தில் அவர்கள் காட்டும் அருளாண்மை பற்றியும் எடுத்துரைத்துப் பாராட்டி மகிழ்ந்து, விரைவில் அப்பள்ளியைக் கல்லூரியாக்கக் கேட்டுக்கொண்டு வாழ்த்தினுர்கள். இறுதியில் நிலமலை இளமாறன் தமிழ்ச்சிட்டுப் பாடல்களைப் பாடி மாணவர்க்கு உணர்வூட்டினுர். மாலை 5-30 மணியளவில் விழா இனிது முடிந்தது.

14. பூ. சா. கோ. (P.S.G.) கலைக்கல்லூரி இலக்கிய மன்றக் கூட்டம் – கோவை.

கோவைச் சுற்று நிகழ்ச்சிகளின் இறுதிக் கூட்டமாகக் கடந்த 29-7-77 முற்பகல் 11 மணியளவில், கோவை, பூ சா. கோ. கலைக் கல்லூரி இலக்கிய மன்றக் கூட்டம் கல்லூரி முதல்வர் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தமிழ் மன்றச் செயலர் வரவேற்புரைக்குப் பின், திரு- குமர நடவரச ஈவப்பனுர், தென்மொழி மறை. நித்தலின்பனுர் அவர்களின் உரைக்குப்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் 'வளரும் தமிழ்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினுர்கள். மாணவர்களில் பலர் தமிழுணர்வு கொண்டு திகழ்வது எதிர்கால வளர்ச்சிக்கு நல்லாக்கம் தருவது என்று ஆசிரியர்கள் தம் உரையிடையே கூறி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

ஆசிரியரின் கோவைச் சுற்று நிகழ்ச்சிகளில் தொடர்ந்து அவருடன் சென்ற தென்மொழியன்பர்களுடன், பல்லடம் தென்மொழி முத்துக்குமரன், அவினுசி, தென்மொழி துரையரசன், திருப்பூர் தென்மொழி தமிழப்பன், தாளவாய்ப்பட்டணம் தென்மொழி அறவாழி ஆகியோரும் இடையிடைக்கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் நடைபெறவிருக்கும் உ. த. க. மாநாட்டில் கலந்து கொள்ள அணியமாகுங்கள் !

இத்தமிழக மறிய அமைந்துள்ளது. உங்கள் நெஞ்சிலே துணிவு உண்டு; உங்கள் சொல்லினிலே தெளிவுண்டு; துன்பமென்றால் துணிவுடன் ஏற்பீர்கள்! இந்தத் தமிழ் மக்கள் நல்வாழ்வெய்தவே! அன்றிலிருந்து இன்றுவரை அயராமல் உழைக்கின்றீர்கள்! ஆனால், இந்த இழி தமிழன்தான் மாறவில்லை! இவனுக்கோ உணர்வுமில்லை பற்றுமில்லை! உங்கள் சொல்லுக்கு வலிவுண்டு! என்றாகிலும். மாறும லிராது இத்தமிழகம்; மாறத்தான் போகிறது! தமிழன் தன்னாட்சி நடத் தத்தான் போகின்றான்; இஃது உறுதி! தமிழனுக்கு- தமிழ்மொழிக்கு இழுக்குச் செய்யும் எத்தர்கள் அன்று அழியத்தான் போகின்றனர்! உங்கள் குரலுக்கு நான்கு கோடித் தமிழ்மக்கள் செவி சாய்க்கத்தான் போகின்றனர்! இன்று பிழைப்புக்கு வெளியிடும் குப்பையிதழ்கள் நாளை பிழைப்புக்கே வழியின்றி வாடுவதைப் பார்ப்பீர்கள்! இன்று நமக்கெதிரே தீங்கு செய்வோர் நாளைத் தீக்குழியில் விழப்போவ தைப் பார்ப்பீர்கள்! செவிடன் காதில் ஓதுவதுபோல் ஓதும் உங்கள் உண்மை மொழியின் உயரிய பொருளைச் செவிட்டு எந்திரம் பொருத்தியாகிலும் நாளைச் செவிமடுப்பதைப் பார்க்கத்தான் போகின் றீர்கள்! உங்கள் எழுத்துக்கு அழிவில்லை! உங்கள் குரலுக்கு வலி வின்றிப் போகவில்லை! என்றோ ஒருநாள் ஆளத்தான் போகின்றோம், இந்த அருந்தமிழ் நாட்டினை நாம்! ஒளியிழந்த நாம் அன்று ஒளி பெறத் தான் போகின்றோம்! மேற்காணுபவை முக்காலும் உறுதி! உறுதி! வாழ்க உங்கள் சீரிய தொண்டு! உங்கள் தொண்டுக்கு வாழ்வளிக்க உயிரையும் அன்பளிப்பு நல்கக் காத்திருக்கும் உண்மைத் தமிழன்,

—கு. அன்பரசு, அ. பள்ளிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

0:536 : பெருந்தகையீர், வணக்கம்பல, பேரவை விழாவிற்குத் தாங்கள் வந்து சென்றபின் பல நண்பர்கள் என்னைச் சந்தித்த பொழுது, தங்கள் சொற்பொழிவையும், விழாப்பெருமையையும் மிக வும் சிறப்பாகப்பாராட்டி உரைத்தார்கள். தெரியாதவர்களும் தெரிந்து கொள்ளுமாறு தாங்கள் உரைத்த கருத்து விளக்கவுரை ஆற்றல் மிகுந்தது; பலர் பயன்பெற்று மாறுவர். குறிப்பாகக் கோவைப் புலவர் திரு. புவியரசு குழுவினர்-வானம்பாடிக்குழு-வலிந்து வட சொற்களைச் சேர்த்து எழுதி வருவதால், அவர்களை நீங்கள் கண்டு கலந்துரை யாடிக் கருத்து முரண்களை மாற்ற வேண்டும் என்பதற்காகவே இப் பட்டி மன்றத்தை அமைத்தேன். தாங்கள் புறப்பட்டுப்போனபின்பு அவருடன் உரையாடிக்கொண்டிருந்த பொழுது, தங்கள் அன்பான உரைகளையும், பாராட்டுகளையும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார். தங்களுடன் முன்பு பழகாததற்குக் கவன்றார். மேலும் திரு. நித்த லின்பனார் நேற்று ஒரு மடல் வரைந்துள்ளார். தங்கள் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக இருந்தன என்றும்; பூ. சா. கோ. கலைக்கல்லூ ரியின் நிகழ்ச்சி அருமையானது என்றும் குறிப்பிட்டுப் பாராட்டி யுள்ளார், மாணவர்களிடையே இயக்கம் பரவவேண்டுவது மிகவும் இன்றியமையாதது. பதிவு நாடாவில் எடுத்த தங்கள் பேச்சினை நண்பர்களுக்கு மீண்டும் போட்டுக் கேட்க வாய்ப்பு ஏற்படுத்தி இருக் கிறேன். அன்பு நிறைந்த —இரா வடிவேலன், க. மு. திருப்பூர்-1.

0:537; ஐயா அவர்கட்கு வணக்கம், தங்களின் வருகைக்குப்பின் எங்கள் பள்ளியில், தமிழுணர்வில், புதுமலர்ச்சி நிகழ்ந்துள்ளமை யைப் பெருமிதத்துடன் காணமுடிகிறது. மாணவர், ஆசிரியன்மார் என்னும் இருநிலையினரிடத்தும் தாய்மொழிப்பற்றில் ஒரு புதுத் தென்பு தோன்றியுள்ளது. —இரணியன், தேவத்தூர், (பழநி)

தென்மொழியின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)